# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு2030 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை [20-06-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:176

## ஓய்வுபெற்ற டாக்டர்களை வேலைக்கு அழைக்க முடிவு

### வேலை நிறுத்தம் தொடர்கிறது

கொழும்பு, ஜூன் 20

சுகாதார மற்றும் வைத்திய சேவைகளை அரசாங்கம் அத்தியாவசிய சேவைகளாகப்பிரகடனம் செய்தும் இதுவரை டாக்டர்கள் எவரும் கடமைக்குத் திரும்பவில்லை.

இதனை அடுத்து அவர்களின் இடங்களுக்கு ஓய்வு பெற்ற டாக்டர்களை சேவையில் ஈடுபடுத்தப் போவதாக சுகாதார சுதேசிய வைத்திய அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்க மருத்து வஅதிகாரிகள் சங்கத்தின் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சுகாதார சேவைகள்சீர்குலைந்துள்ளது தெரிந்ததே.

மீண்டும் சேவையிலமர்ந்து பகுதி நேர அடிப்படையில் பணிபுரிய விரும்பும் ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரிகள் சுகாதார சுதேசிய வைத்திய அமைச்சுடன்உடன்தொடர்பு கொண்டு சேவையில் ஈடுபடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### இரணைதீவுப் பகுதியில் காணாமற்போன லயன் ஏயர் விமான

## தடயப் பொருள்களை குடாநாட்டிலும் பார்வைக்கு வைக்கக் கோரி மனு!

### மன்னார் நீதிமன்றத்தில் தாக்கலாகும்

மன்னார், ஜூன் 20

கடந்த வருடம் இரணைதீவுக் கடற்பரப்பில் காணாமற்போன ''லயன் ஏயர்'' விமானத்தில் பயணம் செய்தவர்களை இனங்காணும் வகையில் இந்தச் சம்பவம் தொடர்பாக மீட்கப்பட்ட தடயப் பொருள்களை யாழ்ப்பாணத்திலும் மக்கள் பார்வைக்கு வைக்க அனுமதிக்க வேண்டுமென மன்னார் நீதிமன்றத்தில்மனு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக மன்னார்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணாமற்போனவிமானத்தில் பயணம் செய்த பெரும்பாலானவர்கள் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் ஆதலால்குறித்த தடயப்பொருள்களை கொழும்பில் பார்வைக்கு வைக்கும் அதே வேளை யாழ்ப்பாணத்திலும் வைக்க ஆவன செய்யவேண்டும் என தாம் கோரப்போவதாக மனுவைத் தாக்கல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக நெடுமாறன்

சென்னை, ஜூன் 20

ஈழத்தில் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதைத் தமிழ் நாட்டுத்தமிழர்கள் பார்த்துக் கொண்டு வாளாதிருக்க முடியாது.

இப்படித் தமிழகத்திலுள்ள தமிழீழ ஆதரவு அமைப்புக்களின் இணைப்பாளர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பகுதியில் பெரும் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்!

## பரந்தனைக் கைப்பற்ற தயாராகின்றனராம்!!

கொழும்பு, ஜூன் 20

**வன்னிப் பகுதியில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்குப் புலிகள் தயாராகின்றனர் என்றும் அவர்களின் இலக்கு அனேகமாக பரந்தன் முகாமாக இருக்கலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டிக் கொழும்புச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.**

1996 இல் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலுக்கு முன்பும் 1998 இல் கிளிநொச்சி முகாம் மீதான தாக்குதலுக்கு முன்பும் புலிகள் எத்தகைய பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனரோ அதே போன்ற பயிற்சிகள் தற்பொழுது பூநகரிக் காடுகளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொறியியல் பீட போதனாசிரியர் இருவர் பலி!

கொழும்பு, ஜூன் 20

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட போதனாசிரியர்கள் இருவர் பேராதனையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — பஸ் விபத்தில் பலியானார்கள்.

நேற்று முன்தினம் இரவு 9. 30 மணியாளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இரு போதனாசிரியர்களும் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள கண்டி வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது பஸ் ஒன்றுடன் மோதுண்டு அந்த இடத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டூர்ராணுவமுகாம்மீது புலிகள் ஷெல் தாக்குதல்

வவுனியா, ஜூன் 20

மண்டூர் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

படுவான்கரைப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட ஷெல்கள் மேற்படி முகாமில் விழுந்து வெடித்தன.

புலிகளின் தாக்குதல்களை அடுத்து படுவான் கரைப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்துப் படையினர் பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி-5)

## பொலீஸார் உட்பட மூவர் வவுனியாவில் கைது

### புலிகளுக்கு வாகனம் விற்றனராம்

கொழும்பு, ஜூன் 20

விடுதலைப் புலிகளுக்கு வாகனங்களை விற்று பணம் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிங்கள பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றும் இரண்டு இளைஞர்களும் வவுனியாப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன 5 மாணவர் விவரம் மன்னிப்புச்சபைபிரதிநிதிகேட்டறிந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நீர்வேலிப் பகுதியில் கடந்த மாதம் காணாமல் போன 5 மாணவர்களின் பெற்றோர்களை சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி இங்கிறீற் மஸாஜ், காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் எம். சி. எம். இக்பால் ஆகியோர் நேற்றுச் சந்தித்தனர்.

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரனும் உடனிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்களின் மனுவை நீதிவான் ஏற்றார்!

### நிபந்தனையுடன் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

இளைஞர் ஒருவரின் கொலை தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேற முடியாதவாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 5 இராணுவ சந்தேக நபர்களும் தமது சொந்த இடங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன்பாலசிங்கத்தை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு கோரவேண்டும்

### சிங்கள அமைப்பு ஒன்று அறிக்கை

கொழும்பு, ஜூன் 20

''அன்ரன் பாலசிங்கத்தை நாடு கடத்தி இலங்கையிடம் ஒப்படைக்கும்படி பிரித்தானிய அரசிடம் இலங்கை அரசு கோரவேண்டும்.''

— இவ்வாறு 'சிந்தன' என்ற சிங்கள அமைப்பின் செயலாளர் கலாநிதி நளின் டி சில்வா, தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கோரியிருக்கின்றார். அவர் அதில் மேலும் கோரியிருப்பதாவது,

தற்சமயம் லண்டனில் வசித்துவரும் அன்ரன் பாலசிங்கம் பிரித்தானியப் பிரஜை என்றாலும் — அவர் [illegible] நாட்டுப் பிரசைஎன்றாலும்— இலங்கை மண்ணில், வன்னி மற்றும் வடக்குப் பிரதேசங்களில் இருந்து இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளார். நாட்டைக் கூறுபோடும் இலக்குடன் செயற்படும் —ஆயுதம் தாங்கிய— இயக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தீயணைக்கும் படையினர் பிக்கெட்டிங் போராட்டம்

கொழும்பில் உள்ள தீயணைக்கும் படையினரின் பிரதான நிலையத்திலிருந்து விமானப் படையினர் வெளியேற்றப்படவேண்டும் எனக் கோரி தீயணைக்கும் படையினர் பிக்கெட்டிங் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் மேல் மாகாண சபை முதலமைச்சரின் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

தீயணைக்கும் படையினர் சேவையை சிவில் சேவையாக்கி மாகாண சபையுடன் இணைக்கும் படியும் பிக்கெட்டிங் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (இ-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## முத்து நவரத்தினம்

[ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், ஸ்பிரிங்வெளி, பதுளை]

பிறவுண் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்து நவரத்தினம் அவர்கள் 19-6-1999 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து-சின்னத்தங்கம் ஆகியோரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், உதயகுமார் [பதுளை], இராஜராஜேஸ்வரி, கணநாதன் [கொழும்பு], இரட்ணமலர் [கொழும்பு], ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீலங்காதேவி [பதுளை], ஞானசுந்தரம் [நொதேன் சார்ஜெஸ்], அரியரட்ணம் [கொழும்பு], பிரேமாவதி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [20-6-99] ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ஞானசுந்தரம்
[மருமகன்]
250, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

391/5, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15
தொலைபேசி இல 01-522353

[66755]

## சின்னத்தம்பி இராசையா

( சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை )

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசையா ( 19 - 06 - 99 ) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் இரத்தினத்தின் அன்புக் கணவரும், நடராசா, தங்கராசா(கனடா), இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, மனோகரன், சிறிகரன் (பிரான்ஸ்), கருணாகரன் (பிரான்ஸ்), ஈஸ்வரி, றதி ( பிரான்ஸ் ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற கந்தையா, ஞானாம்பிகை, இந்திராணி ( கனடா ), இராசரட்ணம், நிர்மலா, காலஞ்சென்ற பத்மநாதன், சகுந்தலா (பிரான்ஸ்), அன்புமலர் ( பிரான்ஸ் ), ஞானேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று ( 20 - 06 - 99 ) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையான் பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. நடராசா
(மகன்)

''அம்பிகை வாசா''
சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை.

(66759)

## திருமதி சின்னம்மா ஆறுமுகம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் 56, தேவாலய வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா ஆறுமுகம் 19 - 06 - 99 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் திரு. சின்னத்தம்பி ஆறுமுகம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற அம்பலவாணர், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி திலகவதி, டாக்டர் திருநாவுக்கரசு (குருநகர் வைத்தியசாலை), புனிதவதி (ஓய்வுபெற்ற புள்ளிவிவர ஆய்வாளர்), திருமதி மங்கையர்க்கரசி (ஆசிரியர் வயாவிளான் ம. ம. வி.), திரு. மாணிக்கவாசகர் (முன்னாள் ஸ்ரீலங்கா, ஓமான் விமானப்படை உத்தியோகத்தர்), திருமதி சொர்ணாம்பிகாதேவி, திரு ஆனந்த நடராஜா (நெல் சந்தைப்படுத்தும் சபை வவுனியா), திருமதி ஞானேஸ்வரி (ஓய்வுபெற்ற பாடசாலை பற்சிகிச்சையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி (துறைமுக அதிகாரசபை) சிவபூசமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அருந்தவராசா, புவனேஸ்வரி (உப அதிபர் மல்லாகம் ம. வி.), காலஞ்சென்ற இராசகோபால் (தெல்லிப்பழை ப. நோ. கூ. ச.), கமலாதேவி, நாகேந்திரன் (பொறியியலாளர் Botsuwana) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நவரத்தினம், கந்தசாமி, பூரணம், செல்லம்மா ஆகியோரின் சகோதரியும், சண்முகாநந்தன் (ஆசிரியர் கொழும்பு), கேமலதா (ஆசிரியர் கொழும்பு), சிவகௌரி (எழுதுநர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை தெல்லிப்பழை), தேவாநந்தன், அருந்தவச்செல்வி, கேதீஸ்வரன் (உயர் தொழில் நுட்ப நிறுவனம்), கேதீசன், கலைமகள் [1 ஆம் வருடம் யாழ். மருத்துவபீடம்], பாலமுருகன், ஞானகணேசன் (பரியோவான் கல்லூரி), ஸ்ரீதர்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], வாசுகி, கஜப்பிரியா, சிறிகாயத்திரி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), கணேசதாசன் [கொக்குவில் இந்துக் கல்லூரி], சர்மிளி, கஜந்தன், சஞ்சயன் (இரம்பைக்குளம் மகளிர் மகா. வி.), நர்மதா, ஜனனி (வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாரங்கனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20-6-99 ஞாயிறு முற்பகல் 9 . 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பிள்ளைகள்

தகவல்: டாக்டர் திருநாவுக்கரசு
(மகன்)

56, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம்.

(66753)

## கொடி தினம்

கோப்பாய் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் கொடி தினம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கென சேகரிக்கப்படும் நிதி அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (இ-180)

## பாராட்டு விழா

சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற செல்வநாயகம் செல்வகுமாரைப் பாராட்டும் விழா ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குக் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் மேற்படி பாடசாலை அதிபர் த. அழகரத்தினம் தலைமையில் நடைபெறும். (இ-7)

## கிறிஸ்தவ பாட வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ். புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கென ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் 'வழிகாட்டல் கருத்தரங்கு' இம் முறை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிசிமித் மண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் அலகு ரீதியான பாட விளக்கங்களுடன், வினாவுக்கு விடையளிக்கும் முறை பற்றியும் விளக்கமளிக்கப்படும்.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தங்கள் பங்குத் தந்தையர்களூடாகவோ, மரியன்னை பேராலய பணிமனையிலோ தொடர்பு கொண்டு தங்கள் பெயர் விவரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுசெய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)


**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய், தேவயானி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
10.00, 2.00, 5. 00
[சி/7920]

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
அருண்பாண்டியன்
மௌலிசா
**ரவுடி வம்சம்**
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
திங்கள், புதன், வியாழனில் காட்சிகள் காண்பிக்கப்பட மாட்டாது.
Fax No. 070- 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 - 212223
(66667)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
முரளி, சூர்யா,
ஜீவிதா, ராதிகா
நடித்த
**காதலே நிம்மதி**
(புதிய நேரம்)
[66702]


## அயடீன் பற்றாக்குறை பற்றிய பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம் 'ஜூன் 20

யாழ். மாநகரசபையின் நகர்ப்புற அடிப்படை சேவைகள் திட்டத்தின் கீழ் லங்கா சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான அயடீன் பற்றாக்குறை ஒழுங்கீனங்கள் பற்றிய பயிற்சிநெறி நாளை திங்கள் 21ஆம் திகதி லங்கா சித்த மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வட இலங்கை சுதேச வைத்தியர் சங்கத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸும் சிறப்பு விருந்தினராக கலாநிதி என். சண்முகலிங்கனும் 'யுனிசெவ்' நிறுவன பணிப்பாளர் பெனி புறூனியும் கலந்து கொள்வர்.

'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படும் இந்தப் பயிற்சிநெறியில் அயடீன் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் என்பன குறித்து சித்த மருத்துவ மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்படும். ((இ-6)


**மாணவர் கல்வி வளர்ச்சி நிதிக்காக**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
விஞ்ஞான பீட மாணவர்கள் வழங்கும்
( இரு நாடகங்கள் )
(1) சடங்குகள் நீத்த தகனங்கள்
(2) அசோகவனம்
இடம்:- யாழ், இந்துக் கல்லூரி
காலம்:- 20 — 06 — 1999 (இன்று)
புதிய நேரம்: காலை 9. 30, மாலை 2. 30
நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளவும்.
விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.
(66756)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகபூரணம் சதாசிவம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் இல: 274 அரசடி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ச. நாகபூரணம் 18- 06 - 99 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும் தில்லைநடராசா (இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும், யசோதராவின் அன்பு மாமியாரும் தி. மயூரன் (கடற்றொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), தி. யசித்தா அவர்களின் பேர்த்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. தில்லைநடராசா
(மகன்)

274, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/7949)

## ஜெறாட் ஜோசப் யூட்

கரம்பனைப்பிறப்பிடமாகக்கொண்டவரும், யாழ்ப்பாணம் செல்லம்ஸ் K. K. S வீதியில் வசித்தவரும், பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீட கணனி ஆலோசகராக கடமையாற்றுபவரும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரும், மாணவத் தலைவருமாயிருந்த ஜெறாட் ஜோசப் யூட் அவர்கள் 15. 06. 99 அன்று கண்டி பேராதனை வீதியில் அகால மரணமானார்.

இவர் அந்தோனிப்பிள்ளை ஜெறாட் (இளைப்பாறிய யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் செல்லம்ஸ் ஜூவல்லறி, மறிற்றோ அவர்களின் அருமைப் புதல்வனும், நிற்றாபிறிமன், மரிடெக்ஸ்(Informatics) ஆகியோரின் சகோதரனும், லெயட் பிறிமன் சிங்கராயரின் (அமெரிக்கா) மைத்துனரும், டிலினி பிறிமனின் மாமாவும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை பாலசிங்கம், காலஞ்சென்ற பேளி அக்கனஸ் பாலசிங்கம், காலஞ்சென்ற ஐபாத்துரை, றோசம்மா ஐபாத்துரை, காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற பெலிஸ்ராஸ் சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற பங்கராஸ்(ராஜா ஸ்ரோர்ஸ்), காலஞ்சென்ற இமல்டா பங்கராஸ் ஆகியோரின் அருமைப்பேரனும், பீற்றர் (லண்டன்), மதுரா(பிரான்ஸ்), வண. பிதா ஜோசப் (அருமைநாயகம் (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும், மாறி(லண்டன்)யின் சிறியமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.06.99) ஞாயிற்றுக்கிழமை மாலை 3. 30 மணிக்கு 19/2 பாம் வீதி, மட்டக்குளியிலிருந்து நல்லடக்கத்திற்காக மாதம்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. ஜெறாட் மாஸ்ரர்
(செல்லம்ஸ்)

19/2 Farm Road,
Mattakuliya,
Colombo 15, Tel: 523405
வண. பிதா ஜோசப் அருமைநாயகம்,
'ஆயர் இல்லம்'
யாழ்ப்பாணம்.

(66752)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் எதிர்பார்த்திருந்த இறுதி ஆட்டம் இன்று!

## பாக், ஆஸி. அணிகள் களத்தில்

லண்டன். ஜூன் 20

இங்கிலாந்தில் நடைபெற்று வந்த 7ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

உலகெங்கும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இறுதி ஆட்டம் இங்கிலாந்தின் 'லோட்ஸ்' மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. ஆஸ்திரேலிய அணியும் பாகிஸ்தான் அணியும் இறுதியாட்டத்தில் களமிறங்குகின்றன.

கடந்த வியாழன் 'எட்பாஸ்ரன்'மைதானத்தில் தென்னாபிரிக்க ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. எனினும் ஓட்ட வீதத்தின் அடிப்படையில் ஆஸ்திரேலிய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் ஆடிய தென்னாபிரிக்க அணி 49.4 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.

எனினும் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டங்களில் ஆஸ்திரேலிய அணியின் ஓட்ட வீதம் தென்னாபிரிக்க அணியை ஏற்கனவே வென்று இருந்ததால் ஆஸ்திரேலிய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் ஆடும் இரண்டாவது அணி பாகிஸ்தான். 16 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் நியூஸிலாந்தை 9 விக்கெட்டுக்களால் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் பங்கு கொள்ளும் இந்த இரு அணிகளுமே ஏற்கனவே ஒவ்வொரு தடவை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

)ஐ-6)

# இரண்டு கொரியாக்களும் மஞ்சட் கடலில் கடுஞ்சமர்!

வடகொரியாவினதும் தென்கொரியாவினதும் கடற்படைகள் இடையேமஞ்சட் கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் கடும் துப்பாக்கிச் சமர் வெடித்துள்ளதை அடுத்து கொரியக் குடாவில் பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

வடகொரியக் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கத் தயாராக தென்கொரியா தனது கடற்படையை உஷார் நிலையில் வைத்துள்ளது.

வடகொரியக் கப்பல்கள் தென்கொரியக் கடற்பிரதேசத்தினுள் அத்துமீறிப் பிரவேசிக்க முற்பட்டபோதே சமர் வெடித்ததாகவும்—

தென்கொரியா பதிலுக்குத் தாக்கியதில் வடகொரியகடற்படைக்கப்பல் ஒன்றுமூழ்கடிக்கப் பட்டதாகவும்—

சியோலில் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆனால்இந்தச்சமர் குறித்து சரியான தகவல்களைப் பெற முடியவில்லை.

இரு கொரியாக்களுக்கும் இடைப்பட்ட சர்ச்சைக்குரிய பிரதேசம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வரும் வேளையில் இந்த மோதல்கள் வெடித்துள்ளன.

இதேவேளை—

சமரை அடுத்து வடகொரியா தனது பீரங்கிக் கப்பல்களை சர்ச்சைக்குரிய கடல் எல்லைக்கு நகர்த்தி உள்ளது.

(ஐ)

## ஆயுதம் ஒப்படைக்க உத்தரவு

பிறிற்றீனா, ஜூன் 20

கொசோவோவில் உள்ள கொசோவோ விடுதலைப் படையினர் தமது ஆயுதங்களை இன்று ஒப்படைத்தல் வேண்டும். இல்லையேல் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும் என ஜேர்மன் படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஆயுதங்கள் இல்லாமலும் சீருடை அணியாமலும் சாதாரண பொது மக்களாகவே கொசோவோ விடுதலைப் படையினர் இன்று முதல் கொசோவோவில் நடமாட வேண்டும் எனவும் ஜேர்மன் கட்டளைத் தளபதி கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கொசோவோ விடுதலை இராணுவம் இந்த உத்தரவுக்குப் பணிந்து ஆயுதங்களைக் கையளிப்பதிலேயே நிரந்தர சமாதானம் தங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ – க)

# சமய சந்திகளில்

கொழும்புத்துறை, ஜூன் 20

மானிப்பாய் புனித அந்தோனியார் வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலியுடனும், திருச்சொருப பவனியுடனும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 20

மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்செருப பவனியும் இடம்பெறும். (ஐ–30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 20

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ–15)

யாழ்ப்பாணம், ஜூன் 20

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து10 நாள்கள்நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜூன். 20

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் உற்சவ நிகழ்வுகளில் 26 ஆம்திகதி சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ – 15)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 20

கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி கோயிலில் நடேசர் அபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (க–4)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 20

விடத்தற் பளை சம்பா வெளிப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த உற்சவம் நேற்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க–30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 20

அளவெட்டி பெருமாக் கடவை பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10.30 மணிக்குத் தேர்த்திருவிழா இடம்பெறும். (க)

★ ★ ★

அச்சுவேலி, ஜூன் 20

பத்தமேனி மிட்டிலங் கூடல் நடராஜ அம்பலவாணேஸ்வரவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் 27 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க – 11)


# வெளிவாரிப் பட்டப் படிப்புப் பதிவு - 1998/99

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1998/99 கல்வியாண்டுக்கு பின்வரும் கற்கை நெறிக்கு வெளிநிலைத்தேர்வுநாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 1999 ஜூலை 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

1) வர்த்தக முதற்கற்கை நெறி
2) கலை முதற்கற்கை நெறி
3) பொதுக் கலைமாணி பகுதி I
4) சிறப்புக் கலைமாணி பகுதி II
5) வர்த்தகமாணி பகுதி I
6) இசைக்கலைமாணி (முதலாம் வருடம்)
7) இசைக்கலைமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி I கற்கை நெறிக்கு பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம் கிறிஸ்தவ நாகரிகம்.

விண்ணப்பப்படிவங்களுக்கு உரிய விவரங்களை வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு அலுவலகத்திலிருந்து நேரடியாகவோ தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

★ விண்ணப்பப் படிவம் ரூபா 15.00
★ பாடத்திட்டமும் விதிமுறைகளும் (முதற்கலை / முதல் வர்த்தக நெறிகளுக்கானது) 35.00
★ பாடத்திட்டம் (சிறப்புக்கலைமாணி, வர்த்தகமாணி. பகுதி 1 பாட நெறிகளுக்கு) 50.00
★ பாடத்திட்டம் (பொதுக்கலைமாணி பகுதி 1, ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும்) 15.00
★ விதி முறைகள் — கைந் நூல் (சகல பகுதி 1 — பாடநெறிகளுக்கும்) 25.00

விண்ணப்பப்படிவத்தினையும் பாடத்திட்டத்தின் பிரதியினையும் நேரடியாகப் பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகையினைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் தமது பாட நெறியை/ கற்க விரும்பும் பாடங்களைக் குறிப்பிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா 13 50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28.20 செ மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இந்த அறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[சி/7947]





வடமராட்சியில்!

பி. ஜெ. பர்னாண்டோ!



- கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குபவர்கள்
- பல் கட்டுபவர்கள்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்துபவர்கள்

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில்
காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4,30 மணி வரை

உரிமையாளர்
லயன் A. ஜெயக்குமாரன்
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

பி. ஜெ. பர்னாண்டோ
'மோகன்ஸ்'
யாழ். வீதி, நெல்லியடி,
(மக்கள் வங்கி முன்பாக)

தொலைபேசி இலக்கம்: 021 – 3212

(66749)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப் பயிற்சி நிலைய புனரமைப்பு வேலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் புனரமைப்பு வேலைகளில் எழுபது சத வீத மான வேலைகள் பூர்த்தியாகியுள்ளன என்று உதவி விவசாயப் பணிப்பாளர் (பயிற்சி) எஸ். சின்னத்துரை தெரிவித்தார்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (யு. என். டி. பி.), கெயர் நிறுவனம், உணவு விவசாய ஸ்தாபனம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த நிலையத்தின் புனரமைப்புக்கு உதவி வருகின்றன என்றும் அவர் கூறினார்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் இந்த நிலையத்தின் அலுவலகக் கட்டடங்கள், விடுதி, தண்ணீர்தாங்கி, நீர்ப்பாசன வாய்க்கால், பண்ணைவேலி, சமையல் அறை, விருந்தினர் மண்டபம் போன்றவை புனரமைக்கப்பட்டுள்ளன.

நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் அதற்கான உதிரிப் பாகங்கள், ஜெனரேட்டர், நடுகைப் பொருள்கள், நிழற்படப் பிரதி இயந்திரம் உட்படப் பயிற்சி உபகரணங்களும் கெயர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

விரிவுரை மண்டபத்துக்குரிய தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் போன்றவை உணவு விவசாய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் விரிவுரை மண்டபத்தைத் திருத்துவதற்கும் இந்த நிறுவனம் உதவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த கால வன்செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் கராஜ், களஞ்சியக் கட்டடம் மற்றும் உத்தியோகத்தர் தங்கும் விடுதி மட்டுமே தற்பொழுது கட்டப்படவேண்டிய நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## ஆறுபேர் பலி

கொழும்பு, ஜூன் 20

தம்புள்ளவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் ஆறு ஊழியர்கள் படகு விபத்தில் உயிரிழந்தனர்.

இவர்கள் உல்லாசப்படகுப் பயணத்தை மேற்கொண்ட போது படகு கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் ஒருவர் பெண்.

அந்த ஹோட்டலுக்கு அருகில் உள்ள வாவியில் இந்த விபத்து இடம்பெற்றது.

# எதிர்வரும் ஒக்ரோபரில் சைவ சமயப் பரீட்சை

யாழ். சைவபரிபாலனசபை வருடந்தோறும் அகில இலங்கை ரீதியாக நடத்தி வரும் சைவ நெறித் தேர்வு இந்த வருடமும் வழமை போல் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் யாவும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

ஆண்டு 2 முதல் 12 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்களில் கல்வி கற்கும் சகல மாணவர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும்—

சைவபரிபாலன சபையின் பரீட்சைக் காரியதரிசி சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30 ஆம் திகதியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# நெஞ்சைவிட்டு அகலாத 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 03 — 1932



மறைவு: 11 — 07 — 1997

## திருமதி சின்னராசா கனகம்மா

ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம்
நொந்து பெற்ற அம்மாவே!
உம்மை மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

[66723]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## சண்முகம் சிவசுப்பிரமணியம்

(புகையிரத நிலைய இளைப்பாறிய, அதிபர்)

தோற்றம் 07 — 01 — 1923 மறைவு 21 — 05 — 1999

21-05-99 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆறாத்துயரில் கலந்துகொண்டு உதவிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதோடு இன்று (20-6-99) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

விளிவியோடை,
வல்வெட்டி.

(66689)

# சமாதானம் தொடர்பான சித்திரப் போட்டி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட 'சர்வதேச சமாதானம்' என்னும் சித்திரப் போட்டியில் சித்திபெற்ற பதினைந்து மாணவர்களின் பெயர்கள் கல்வி வலய அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

சித்திரப் போட்டியில் சித்திபெற்ற பதினைந்து மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை ...ச்சு வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசாவினால் வழங்கப்படுமென கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

சித்திபெற்ற மாணவர்களின் பெயர்களும் பாடசாலைகளும் வருமாறு:—

★ உ. சிசில் ரெமின்டஸ் — சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க பாடசாலை.

★ இ. தசிதரன், இ. பிரதாபன், ச. ஸ்ரீபிரகாஸ் — சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

★ அ. கர்சன், க. கஜீபன், ப. பாலமுருகன் — மீசாலை வீரசிங்கம்மகாவித்தியாலயம்.

★ கா. சதீஸ், தி. சசிகரன், கா. வில்சன் — சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

★ செ. நவநீதன், ச. தினேஸ்குமார், சி. சதீஸ் — நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

★ சி. உமாகரன், யோ. டினேஸ் — மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.

(ஐ-117)

# கும்பாபிஷேகம்

சோப்பாய் தெற்கு ஆஇருபாலை குழுக்கண்டி வரலடி அருள்மிகு ஸ்ரீஞான வைரவப் பெருமானுக்கு புனரம்பர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இதற்கான கிரியைகள் புதன்கிழமை ஆரம்பமாகும். எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் அன்றைய தினம் நண்பகல் 12.00 மணி தொடக்கம் மாலை 6.00 வரையும் இடம்பெறும்.

(ஐ-30)

உ

நீர்வேலி

# காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய முன்பள்ளி புதிய கட்டடம் திறப்புவிழா அழைப்பு

காலம்: 20-06-1999 இன்று ஞாயிறு பி. ப. 3.00 மணி

இடம்; காமாட்சி அம்பாள் மைதானம்

தலைவர்: திரு. சி. அருந்தவநாதன்

வரவேற்புரை: திரு. செ. சுப்பிரமணியம்

பிரதம விருந்தினர்கள்:

திரு. S. V, சங்கரப்பிள்ளை
(செயற்றிட்ட நிறைவேற்றுனர் - சர்வோதயம்)

திரு. க. கேதீஸ்வரன்
(பிரதேச செயலர் - கோப்பாய்)

கலை நிகழ்வுகள், பட்டி மன்றம்
(அமுத சுரபி கலாமன்றம்)

நன்றியுரை: நா. சு. கலாதீபன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா அமைப்பாளர்கள்:

க. ஜெயாதரன் — மு. தங்கராசா
ந. மதீஸ்வரன் — நா. சதீஸ்குமார்
வை. ரமேஸ் — சு. சத்தியதீபன்

நிர்வாகம்.

காமாட்சி அம்பாள் சனசமூக நிலையம்,
நீர்வேலி.

(66722)

பாஸ்கரன் சிற்பாலயம்
யாழ்ப்பாணம்.

இளவரசி புடைவை மாளிகை
யாழ்ப்பாணம்.

அருணா ஸ்ரோர்ஸ்
நீர்வேலி. (K.K.S)
செ. முருகையா

நொதேண்
எஞ்சினியரிங் வேக்ஸ்
யாழ்ப்பாணம்.

அபிராமி
பார்மசி அன் குறோசறி
நீர்வேலி.
அ. அருமைநாதன்

சுஜி
மரத்தளபாடத் தொழிற்சாலை
மு. தங்கராசா நீர்வேலி.

ராஜ்மணி பந்தல் சேவை
நீர்வேலி.

மயூரி இரும்பகம்
வை. சோதி நீர்வேலி,

ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
நீர்வேலி. T.P/FAX / 0212354 / 2383

பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த. சாதாரணதரம்
அல்லது மேல்

தபாலில் ஆறு மாதங்களில்
பயிலலாம்.

பாலர் ஆசிரியர்சங்கம்
கொக்குவில்

[66481]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மேலும் உறுதியாகிறது

வடக்கு—கிழக்கு மாகாணத்திலும் தென்னிலங்கையின் ஏனைய சில பகுதிகளிலும் அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு மாதாந்தம் அது நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப் படுகிறது. தமிழ் எம். பிக்கள் பதினெட்டுப்பேர் ஆதரித்து வாக்களிப்பதனாலேயே அது சுலபமாகநிறைவேறுகிறது. இவர்கள் வடக்கு—கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களின் தமிழ் மக்கள் சார்பில் சபையில் அமர்ந்திருப்பவர்கள்.

அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் பல வகையான இம்சைகளுக்கும், இன்னல்களுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாகுபவர்கள் தமிழர்களே. அவர்களைக் கண்டபடி கைது செய்யவும், தடுத்து வைக்கவும், காணாமற் போகச் செய்யவும் ஆயுதப் படைகளுக்கு எல்லையற்ற அதிகாரத்தையும் உத்வேகத்தையும் கொடுப்பது அந்தச் சட்டமே.

இனப்பிரச்சினையை சமாதான வழியில், அரசியல் தீர்வு மூலம், முடிவுக்குக் கொண்டு வருவதாக உறுதிமொழி வழங்கித் தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்றே பொ. ம. ஐ. முன்னணி அரசு பதவிக்கு வந்தது. ஆனால் இப்போது தனது செயலுக்கு ஒவ்வாத காரணங்களைத் தெரிவித்து, நியாயப்படுத்திக்கொண்டு போரை நடத்துகிறது. தமிழர்களை அகதிகளாக்கி அவலமுற வைத்து அழிக்கவும் செய்கிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில், அரசுக்குப் பாடம் படிப்பிக்கும் பொருட்டாவது வடக்கு—கிழக்குத் தமிழ் எம். பிக்கள் அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று தமிழர்கள் சார்பில் பலதரப்புகளும், பல தடவைகள் கேட்டு வருகின்றன.

ஆனால் நாடாளுமன்ற ஆசனங்களில் வீற்றிருப்பதால், ஆளுங்கட்சிக்குப் பந்தம் பிடிப்பதால், தமக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளையும் சலுகைகளையும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இழக்க விரும்பவில்லை. அதனால் அரசாங்கம் தான் நினைத்ததைச் சாதித்து வருகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அலுவலகத்திற்தள் "வீரவிதாஹன" பேரினவாத அமைப்பினர் அத்துமீறிப் புகுந்து நடத்திய அடாவடித்தனம் தமிழர்கள் பரந்த அளவில் மிதித்து நசுக்கப்படுவர் என்பதனைக் கட்டியம் கூறுவதாக அமைந்தது.

இதனைக் கருத்திற் கொண்டு மலையகத் தமிழர் பிரதிநிதிகளான இ. தொ. காங்கிரஸ் எம்.பிக்கள் அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்ற குரல் மலையகம்வாழ்தமிழர்களிடம்இருந்து எழுந்தது. ஆனால் இ.தொ.கா. உறுப்பினர்களும் ஏனைய தமிழ் எம். பிக்களைப் போலவே மக்கள், குரலுக்கு மதிப்பளிக்கவில்லை. தமிழ் அரசியல் வாதிகள் அவர்கள் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாயினும் மக்களைவிடத் தத்தமது சுயலாபங்களையே அதிகம் நேசிக்கும் கூட்டத்தினர் என்பதனை நிரூபித்து விட்டனர்!

நாடாளுமன்ற அரசியல் என்று வேடம் போடுவோர். ஜனநாயகம் என்று வாய்ச்சவாடல் நடத்துவோர் துணையுடன் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறமுடியாது என்ற கவலைக்குரிய நிலையையே இத்தகைய போக்கு மேன்மேலும் உறுதி செய்கிறது.

# சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 771 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

வலி. மேற்கு, ஜூன் 20

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 771 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள 365 குடும்பங்களும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாகத் தங்கியுள்ள 391 குடும்பங்களும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள 15 குடும்பங்களும் இதில் அடங்கும்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வட்டு. கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 42 குடும்பங்களுக்கும் அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 3 குடும்பங்களுக்கும் அராலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 5 குடும்பங்களுக்கும், சங்கானை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 152 குடும்பங்களுக்கும், சங்கானை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 14 குடும்பங்களுக்கும் சித்தன்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 18 குடும்பங்களுக்கும் பனிப்புலம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 5 குடும்பங்களுக்கும், தொல்புரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 17 குடும்பங்களுக்கும், வட்டு. மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 3 குடும்பங்களுக்கும் வட்டு. தென்மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 12 குடும்பங்களுக்கும், வட்டு. தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்தில் உயர்பட்ட ஆய்வு பீடம்

### பேராசிரியர் சண்முகதாஸ் பீடாதிபதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்இம்மாதம் தொடக்கம் "உயர்பட்ட ஆய்வு பீடம் (Faculty of Graduate Studies) என்னும் புதிய பீடம் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் எல்லாப் பீடங்களின் உயர்பட்டப் படிப்புகளும் ஆய்வுகளும் இப் பீடத்திலேயே இனி நடைபெறும்.

தற்போது (1) மண், சூழல் அறிவியல், (2) வரலாற்றுச் சமூக ஆய்வு, (3) சமய மெய்யியல் ஆய்வு, (4) மொழி பண்பாட்டு ஆய்வு, (5) மேம்பாட்டு ஆய்வு, (6) சட்ட ஆய்வு ஆகிய துறைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இவற்றுடன் வாழ்வறிவியல் ஆய்வு, பௌதிக அறிவியல்கள், மருத்துவ அறிவியல்கள். விவசாய அறிவியல்கள் ஆகிய துறைகளையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இந்தப் புதிய பீடம் பல்கலைக்கழக எதிர்காலக் கல்விசார் வளர்ச்சிக்கு ஆணிவேராக அமையும். இது யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டிலே அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பீடத்தின்முதல் பீடாதிபதியாக பேராசிரியர் அ.சண்முகதாஸினை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமித்துள்ளது. உயர்பட்ட ஆய்வு தொடர்பான இப்பீடத்துக்குத் தேர்தல் முறை இல்லாமல் தகைமைகள் அடிப்படையிலும் துணைவேந்தரின் பரிந்துரையிலும் பல்கலைக்கழக ஆணைக்குழு முதல் பீடாதிபதியை நியமித்துள்ளது.

ஸ்கொட்லாந்து எடின்பறோப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற வரும் பல நூல்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதிய வரும், பல நாடுகளிலே நடைபெற்ற உலகாய்வு மாநாடுகளில் பங்கு பற்றிய வருமாகிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் உயர்பட்ட ஆய்வு பீடாதிபதியாக இம்மாதம் 16 ஆம் திகதியன்று பதவியேற்றார். (அ)

## குளங்கள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன்20

பட்டினிக்கெதிரான நிறுவனம் வலிகாமம் பிரிவில் உள்ள இரண்டு சிறு குளங்களை இவ்வருடம் புனரமைப்புச் செய்யத் திட்டமிட்டுள்ளது.

கந்தரோடையில் அமைந்துள்ள துரும்பு குளம், மல்லாகத்தில் அமைந்துள்ள நீலி அம்பனைக் குளம் ஆகிய இரண்டு குளங்களுமே புனரமைப்புச் செய்யப்பட உள்ளன. இது தொடர்பான முன் நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவு கிராம சேவையாளர்களின் ஒத்துழைப்புடன் அந்தந்தப் பகுதி பொதுமக்களை வரவழைத்து கூட்டங்களை நடத்தி புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மேற்பார்வை செய்யவும் என குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கந்தரோடை ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் நாளை நடைபெற உள்ள கலந்துரையாடலைத் தொடர்ந்து கந்தரோடை துரும்பு குளபுனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. (உ-152)

## பாடசாலை பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயம் அடுத்த மாதம் முதல் 'வட்டு. மத்திய கல்லூரி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தரமுயர்த்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மேற்படி விடயம் குறித்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. [உ-7]

## மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த நாகலிங்கம் தில்லையம்பலம் (வயது 72) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரணவிசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. [உ-15]

## ஊழியர் சங்க சார்பில் நடைபெறவில்லை

"பேராசிரியர் துரைராசா நினைவுப் பேருரையை பல்கலைக்கழகம் வருடாந்தம் நடத்த வேண்டும்" என்ற தலைப்பில் 15-6-99 'உதயன்' இதழில் வெளிவந்த செய்தியில் குறிப்பிடப்பட்டதுபோல —

நினைவுக் கூட்டம் பல்கலைக்கழக ஊழியர் சங்க சார்பில் நடத்தப்படவில்லை என்றும் —

எஸ். தனேந்திரன் ஊழியர் சங்கத் தலைவர் அல்லர் என்றும், ஊழியர் சங்கத்தின் சார்பில் எவரும் பேசவில்லை என்றும் —

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம். (அ)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூன் 20

மக்கள் வங்கி வடவலயமும் மக்கள் வங்கி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு;

★ காலை 8. 30 மணி — சங்கானை ப. நோ. கூ. சங்க அணி எதிர் சிமெந்துக்கூட்டுத் தாபன அணி.

★ பகல் 11. 30 மணி — தபால் திணைக்கள அணி எதிர் இலங்கை வர்த்தக வங்கி அணி.

★ பிற்பகல் 2. 30 மணி — பல்கலைக்கழக அணி எதிர் பலாலி ஆசிரியர் கலாசாலை அணி. (இ-6)

# இயேசுவின் வார்த்தையும், வாழ்வும் நம்பிக்கையின் வரைவிலக்கணங்கள்

நம்பும்படி சொல்வதைவிட, நம்புவதற்கான வாழ்வுதான் வழிகாட்டிக்குத் தேவை. அந்த வாழ்வை யாரிடமும் எதிர்பார்த்துத் தம் வாழ்வை இழந்துவிடாது தம் வாழ்வில் நம்பிக்கை ஏற்படவும் அதுவே மற்றவர் வாழ்வுக்கு வழிகாட்டும் வாழ்க்கையுமாக அமைய வாழ்ந்துகாட்ட வேண்டும்.

சிறுவர்களிடம் உங்கள் இலட்சியம் எதுஎன்று கேட்டபோது, நான் ஆசிரியராக வர வேண்டும், நான் குருவாகவர வேண்டும், நான் விளையாட்டு வீரனாக வரவேண்டும், நான் உயர்ந்த தலைவனாக வரவேண்டும் என சிறுவர்கள் கூறிக்கொண்டார்கள்.

அவர்களுக்கு அந்த வாழ்வு எப்படி இலட்சியமானது என்றால் நல்ல வழிகாட்டியாக, முன்மாதிரியாகத் தன் வாழ்வில் மதிப்பளிக்கும் உயர் நிலையாக அவர்களை எதிர்கொண்டதாலே அந்த வாழ்வு சிறுவர்களுக்கு இலட்சியமானது எனலாம்.

இந்த முன்மாதிரி வாழ்வு வாழ்வோர்மட்டில் ஏற்படும் நம்பிக்கைக்கு அவர்கள் வழிகாட்டல் எப்படி அமைய வேண்டும் என நற்செய்தியில் உவமை வடிவில் விளக்கினார் இயேசு.

நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுக் கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளைக்காரராய் இருப்பர். வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர். அவருக்கே காவலர் வாயில் திறந்துவிடுவர். ஆடுகளும் அவரது குரலுக்கே செவி சாய்க்கும்.

அவர் தம் சொந்த ஆடுகளை பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார், அவர் அவற்றுக்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின் தொடரும் ஏனெனில் அவரது குரல் அவற்றிற்குத் தெரியும்.

"நானே வாயில் என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர், வெளியே வருவர் மேய்ச்சல் நிலத்தைக் கண்டு கொள்வர் திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்கும் அன்றித் திருடர் வேறு எதற்கும் வருவதில்லை

ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டுவந்துள்ளேன். நல்ல ஆயன் நானே"

### யோசப்பாலா

இறைமகன் இயேசுவின வார்த்தையும் வாழ்வும் நம்பிக்கையானதால் அவர் வழியில் தொடரும் மக்கள் கூட்டம் அகிலம் எங்கும் ஈராயிரம் ஆண்டுகளாய் பயனளிக்கிறது.

இன்று தலைமைத்துவத்துக்கானபயிற்சிகள், பட்டறைகள், அறிமுகங்கள் பல வழிகளில் ஏற்படுத்திய போதும் நம்பமறுக்கும் வாழ்வுகளும் வார்த்தைகளும் தலைமைகளுக்குச் சவாலாகிறது இன்றைய சவால்களை வென்று சரித்திரம் படைக்கும் தலைமை உருவாக கிறிஸ்துவின் முன்மாதிரியை ஒவ்வொருவரது வாழ்விலும் வெளிப்படுத்த உயிர்க்க வேண்டும் புதுவாழ்வில் நம்பிக்கை பிறக்க வேண்டும்.

★

ஞாயிறு நற்பிரசாதம்

## நாளை

**ஆனி 7**

**திங்கட்கிழமை**

திதி: அட்டமி

பிற்பகல் 4.31 வரை

நட்சத்திரம் உத்தரம்

பிற்பகல்: 1.21 வரை.

ஆனிஉத்தரதரிசனம்

சுபநேரம்: 11.54 — 1.24

ராகுகாலம்: 7.24 — 8.54

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒருவனுடைய உள்ளமும் உடைமையும் கிருஷ்ணனுக்கு அர்ப்பணமாகும் போது தான் அறிவு பூரணமாகிறது என்பதை நன்றாக உணர வேண்டும்.

— ஸ்ரீ சைதன்யர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போர்க்கோஷம் IV' - யாருக்கு லாபம்?

'போர்க்கோஷம் IV.' இதுவும் சத்தம் சந்தடியின்றி நடந்தேறிவிட்டது.

பெரியமடுப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் ஏதோ சுற்றுலா கிளம்புவதுபோல் கிளம்பி ஆண்டான் குளம் பள்ளிவாசல் பிட்டி வரை போய்ச்சேர— தள்ளாடிப் பகுதியிலிருந்து புறப்பட்ட படையினர் ஏற்கனவே தமது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கேதீஸ்வரம் பகுதியின் ஊடாக பாப்பா மோட்டை என்ற இடம்வரை முன்னேறியுள்ளனர்.

பெரிய மடுவிலிருந்து புறப்பட்டவர்கள் வட்டக் கண்டல் ஊடாக ஆண்டான் குளத்தை அடைந்துள்ளனர். அதேவேளை திருக்கேதீஸ்வரத்திலிருந்து புறப்பட்ட படையினர் மாந்தை, அடம்பன், பாப்பா மோட்டை ஆகிய பகுதிகளை அடைந்து சற்று முன்னேறி பள்ளிவாசல் பிட்டியில் நிலைகொண்டுள்ளனர்.

ஆனால் இவர்கள் விடத்தல் தீவைப் பிடித்து விட்டதாகச் சொல்லப்பட்டதாயினும், அவர்கள் விடத்தல் தீவை அடைய ஆட்காட்டி வெளி [ இதில் பெரியமடுவிலிருந்து வரும் பாதையும் திருக்கேதீஸ்வரமூடாக மன்னாரிலிருந்து வரும் பாதையும் இணைகின்றன. ] பள்ளமடுச் சந்தி ஆகிய பகுதிகளைக் கடந்தே விடத்தல் தீவை அடைய வேண்டும்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்த முன்னேற்றத்தால் யாருக்கு லாபம், யாருக்கு நட்டம் என்று தெரியாமலே உள்ளது.

அதனால் தானோ என்னவோ புலிகளும் படையினரை மாலைபோட்டு வரவேற்கவில்லையே தவிர மற்றும்படி அவர்கள் முன்னேற்றத்துக்கு எந்தவிதமான தடங்கல்களும் ஏற்படாதவிதமாக— தங்களையும் தங்கள் உடைமைகளையும் வெற்றிகரமாக நகர்த்திக் கொண்டு விட்டனர்.

இதனால்தானோ என்னவோ புறப்பட்ட படையினருக்குப் போகும் வழியில் சறுக்கி விழுந்த காயம்கூட இல்லாமல் வெற்றிகரமாகப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வழமைபோல் விஜயம் செய்துசிவில்நிர்வாகத்தை ஏற்படுத்தச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டு வந்து விட்டார்.

கடந்த புதன்கிழமைசெய்தியாளர்களும் இந்தப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மொத்தமாக 358 கிலோமீற்றர் பரப்பளவு புதிதாக தமது கட்டுப்பாட்டில் வந்து விட்டதாகவும், இதில் 28 கிராமசேவகர் பிரிவுகள்அடங்கியிருப்பதாகவும், இது மன்னார் மாவட்டத்தின் பெருநிலப்பரப்பின் 90 வீதமான பகுதியென்றும் அங்கே செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 20 ஆயிரம் பேர் தமது கட்டுப்பாட்டில் வந்து விட்டதாக படையினர் முன்னர் தெரிவித்தனர். ஆனால் தற்போது ஏறத்தாழ 8 ஆயிரம்பேர் வரையானோரே அங்கு இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**வவுனியா வலம்**
**- ரா. இளவரசன்-**

மன்னாரிலிருந்து — பூநகரி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பாதையைத் திறப்பதற்காகவே இந்த 'ரணகோஷ - IV' நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதற்காகவே இந்த நடவடிக்கை பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. புலிகளின் எதிர்ப்பு பயங்கரமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக முருங்கன் பகுதியில் பெருமளவு நீண்டதூர ஆட்லறிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவைகளுக்கெல்லாம் வேலையின்றிப் போய்விட்டது.

படையினர்பயணித்தபகுதியில் புலிகளின் எந்தவித முகாம்களோ, பங்கர்களோ இருந்ததில்லை என்று அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர். உயிலங்குளம் ஊடாகப் பயணிகள் போய் வரும்போது மேற்கொள்ளப்படும் பாஸ் பரிசோதனை மற்றும் சோதனைச் சாவடிகள், மக்கள் தங்கும் விடுதி என்பன இந்தப் பகுதிக்குச் சற்றுத் தொலைவிலுள்ள பள்ளமடுப்பகுதியில் இருந்தன. பின்னர் படையினரின் முன்னேற்றத்தை எதிர்பார்த்து அவைகளெல்லாம் தற்போது 6 மைல் தொலைவிலுள்ள கள்ளிபடி என்ற பகுதிக்கு அருகிலுள்ள கட்டாடிவயல் என்ற இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டன.

இந்த நிலையில் இந்த முன்னேற்றம் புலிகளை எது விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் எதிர்பார்த்த நகர்வு போலவே தோன்றுகிறது. இவ்வாறான நிலையிலும் படைத்தரப்பு தாம் மன்னாரிலிருந்து சங்குப்பிட்டிப் பாதையில் 11 கிலோமீற்றர் தூரத்தை வெற்றிகரமாகப் பிடித்து விட்டதாக மீசையில் மண் ஒட்டாத கதை பேசுகிறார்கள். ஆனால் உண்மையில் ஏற்கனவே படையினர் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார், தள்ளாடி, திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளைக் கழித்து விட்டுப் பார்த்தால் படையினர் முன்னேறிய தூரம் மிக மிகக் குறைவு என்றே சொல்லக் கூடியதாக இருக்கிறது.

தென் பகுதியில் தற்பொழுது சில இடங்களில் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது. அதில் ஐ. தே. கட்சி அரசு ஆட்சியிலிருந்த போது படையினரின் வசம் இருந்த நாட்டின் பகுதிகளும், புலிகள் வசம் இருந்த பகுதிகளும் நிறமிடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னொரு சுவரொட்டியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபின் படையினர் வசமுள்ள பகுதியும்- தற்போது புலிகளின் வசமுள்ள பகுதியும் நிறமிடப்பட்டுள்ளது.

தற்போதைய இந்த முன்னேற்ற நடவடிக்கையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இதுபோன்ற பிரசார நடவடிக்கைகளுக்கு உபகாரமாக அமையுமேதவிர வேறெந்த உருப்படியான காரியத்தையும்செய்யும்போல் தெரியவில்லை.

ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் தான். வன்னிக் கான ஒரே வழிப் பாதையான உயிலங்குளமு மூடப்பட்ட நிலையில் பயணிகள் போக்குவரத்து, உணவு விநியோகம் அனைத்தும் ஸ்தம்பித்துப் போயுள்ளது

ஆயினும்ஐந்நூறுபேர்வரையானவர்கள் இந்த முன்னேற்றம் முடிந்த கையோடுகடந்த 12 ஆம், 14 ஆம் திகதிகளில் தங்கள் அவசர தேவைகருதி பள்ளமடுவிலிருந்து நீண்டதூரம் கால்நடையாக பம்பைமடு இராணுவத்தினரிடம் வந்து சேர்ந்த இவர்கள் வழமையான சோதனை நடவடிக்கையின்பின் மன்னாருக்கும், வவுனியாவுக்கும்அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதேவேளைகடந்த 11 ஆம் திகதி இந்த முன்னேற்றம்
(8 ஆம் பக்கம் பார்க்க)

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

# உலகின் சிறந்த இயற்கைத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்க முயற்சியா?

திருகோணமலைத் துறைமுகம் உலகின் மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்கள் இடம்பெற்றவேளை ஆசியப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்தத் துறைமுகம் திகழ்ந்திருந்தது.

பிரித்தானிய சாம்ராஜ்யத்தினர் திருகோணமலையைக் கைப்பற்றியவேளை திருகோணமலைத் துறைமுகத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இரண்டு மூன்று தசாப்த காலங்களின் முன்னர் சர்வதேச யுத்தக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்து யுத்தப் பயிற்சி பெற்றமை அந்தச்சமயம் வழமையான சமாச்சாரங்களாகும். சாதாரண யுத்தக் கப்பல்கள் உட்பட விமானம் தாங்கிக் கப்பல்களும் இந்தத் துறைமுகத்தில் யுத்தப் பயிற்சிக்கென வந்துசென்றுள்ளன.

1958 ஆம் ஆண்டு பிரித்தானியர் திருகோணமலைத் துறைமுகத்தை அன்றைய பண்டாரநாயக்க அரசிடம் கையளித்துச் சென்ற பின்னரும் கூட சர்வதேச யுத்தக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தினை போர்ப் பயிற்சிக்களமாக பயன்படுத்தி உள்ளன.

பிரித்தானியர் இலங்கை அரசிடம் இந்தத் துறைமுகத்தினைக் கையளித்துச்சென்றதைத் தொடர்ந்து சரக்குகள் ஏற்றி இறக்கும் பணிகள் இந்தத் துறைமுகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன. தனியார் நிறுவனங்கள் பலவும் துறைமுகத்தில் சரக்கு ஏற்றுமதி இறக்குமதி வேலைகளை மேற்கொண்டு வந்தன. பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் குறிப்பாக தமிழ் பேசும் தொழிலாளர்கள் இந்தத் துறைமுகத்தில் வேலைவாய்ப்பினைப் பெற்றிருந்தனர். வேலையற்றோர் பிரச்சினை திருகோணமலையில் இல்லை என்று கூறும் அளவிற்கு வெளி மாவட்டத்தில் இருந்து வந்தோரும் இங்கு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டனர்.

## அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் அசமந்தம்

சர்வதேசக் கப்பல்கள் பலவும் திருகோணமலைத் துறைமுகத்தினை வந்தடைந்து பொருள்களை ஏற்றி இறக்கும் பணிகளை மேற்கொண்டிருந்தன. நாட்டின் மொத்த தேயிலை ஏற்றுமதியும் திருகோணமலைத் துறைமுகத்தினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு தனியார் நிறுவனங்களின் சரக்கு ஏற்றுமதி இறக்குமதியின் விளைவாக பல இலட்சக் கணக்கான ரூபா பணத்தினை சம்பாதித்தன.

குறிப்பாக இந்த நிறுவனங்களைப் பொறுத்தவரை நூறு வீதம் தமிழர்களுக்குச் சொந்தமானவையாகும். இந்த நிலையில் தான் திருகோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது. தேசியமயமாக்கல் நடவடிக்கையின் மூலம் இந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான பாரிய இயந்திரப் படகுகள், வள்ளங்கள் மற்றும் ஏனைய சாதனங்களை அரசு தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

இந்தக் காலகட்டத்தில் மாதாந்தம் முப்பதுக்கு மேற்பட்ட சரக்குக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்து சென்றதனை எவரும் மறுக்க முடியாது.

**திருமலைத் திருமுகம்**
**— சங்கீத் —**

அன்றைய காலகட்டத்தில் துறைமுகத்தினைப் பயன்படுத்தியோர் பல்வேறு காரணங்களுக்காகவும் இதனைப் பயன்படுத்திவந்துள்ளனர். போதிய களஞ்சிய வசதி சுறுசுறுப்பான தொழிலாளர்கள், பிரித்தானியர் — விட்டுச் சென்ற பாரிய இயந்திர சாதனங்கள் என்பனவும் இந்தத் துறைமுகத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் காரணிகளாக அமைந்திருந்தன.

ஆனால் தேசிய மயமாக்கல் போர்வைக்குப்பின்னர் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்பட்டு தற்போது உள்ளூர் கப்பல்களும் பிறிமா மா ஆலை மற்றும் டோக்கியோ சிமெந்து நிறுவனம் போன்றவைக்கான சரக்குக் கப்பல்களுமே இந்தத் துறைமுகத்தில் தரித்துச் செல்கின்றன.

இந்த நிலையில் தான் திருகோணமலை துறைமுகத்தின் மூலம் பெரு நஷ்டம் ஏற்படுவதாகவும் ஏனைய துறைமுகங்களின் மூலம் பெறப்படும் வருமானத்தைக் கொண்டே திருகோணமலைத் துறைமுகம் நிர்வகிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

தற்போது சர்வதேச ரீதியில் பாரிய கப்பல்கள் கட்டப்படுவதாகவும் இந்தக் கப்பல்கள் திருகோணமலை வந்து செல்ல முடியாத நிலை உருவாகி உள்ளதாகவும் துறைமுக கடல் பகுதியினை ஆழப்படுத்தினால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனவும் அரசு தரப்பில் கூறப்பட்டு வருகின்றது.

அண்மையில் திருகோணமலைக்கு வருகை தந்த துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கூட திருகோணமலைத்துறைமுகத்தினை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி இந்த துறைமுகத்தின் உச்சப் பயனைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறிச் சென்றுள்ளார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாகவே திருகோணமலைத்துறைமுகத்தை புனரமைத்து அதன் உச்சக்கட்ட பயனைப்பெறப் போகிறோம் எனக் கூறிச் செல்பவர்கள் கொழும்பு சென்றதுமே தாம் கூறியவார்த்தைகளை மறந்து விடுகின்றனர்.

புதிய துறைமுகங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உருவாக்க முனையும் அரசும் அமைச்சர்களும் பல்வேறு வசதிகளுடன் அமைந்துள்ள இந்தத் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்யவும் அதனை முறையான வகையில் பயன்படுத்தவும் முனையாமைக்குக் காரணம் திருகோணமலைத் துறைமுகம் தமிழர் - தாயகமான வடக்கு – கிழக்குப் பகுதியில் அமைந்திருப்பதுதான் என எண்ணத் தோன்றுகின்றது.

நாட்டின் வளங்களை துஷ்பிரயோகம் செய்வது எவ்வாறு துரோகமான காரியமோ அவ்வாறே நாட்டின் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தாமையும் நாட்டுக்கும் மக்களுக்கும்செய்யும் துரோகம் என்பதனை ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போர் மறந்து விடக் கூடாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுக்கப்பட்ட நெறிகளைக் கைக்கொள்ளும் அமெரிக்க நாட்டு மக்களின் வாழ்வியல்புகள்

அமெரிக்கா சென்றுள்ள மூத்த பத்திரிகையாளரான செல்லப்பா நடராசா அங்கிருந்து தமது அவதானிப்புக்களை உதயன் வாசகர்களுடன் விசேடமாகப் பகிர்ந்து கொள்கிறார். எமது நாட்டு நடப்புக்களைப் பற்றிச் சிந்திக்கவும் அவரது அவதானிப்புகள் பயன்படும்.

## திருமணவைபவத்தைஉரியநேரத்தில் நடத்த ஒத்திகை பார்க்கின்றார்கள்!

மக்களின் வாழ்க்கைப் பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் நடைமுறைகள் கல்விப் பாரம் பரியங்கள் நாட்டுக்கு நாடு வேறுபட்டவையாகும். இதற்கு அமெரிக்க நாட்டு மக்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர். இங்குள்ளவர்களது பெருந்தன்மைகள் வாழ்வியல்புகள் பல எனது கவனத்தை அதிகம் ஈர்த்துள்ளன.

அமெரிக்க மக்கள் இன்னொருவருடைய குடும்ப விவகாரங்கள் பற்றி அறியவோ தலையிடவோ விரும்புவதில்லை, மிக அருகருகே அக்கமும் பக்கமுமாக நீண்டகாலமாக வதியும் குடும்பங்களிடையேகூட ஒருகுடும்பத்தைப் பற்றிய விவரங்கள் இன்னொன்றுக்குத் தெரிய வருவதில்லை. ஒருவருடைய சாதி, சமயம், குலம், கோத்திரம், தொழில், வருமானம், விவாக பந்தங்கள், படிப்பு இவற்றில் எவற்றைப் பற்றியுமே இன்னொருவர் கவனம் செலுத்துவதில்லை, இவ்வாறாக அமெரிக்க மக்கள் பல நூற்றாண்டு காலமாக வாழப் பழகிக் கொண்டு விட்டார்கள் என்றே எவராலும் கணிக்க முடியும்.

### குதூகலப் பண்பினர்

ஒப்வு நாள்களிலோ அல்லது வேறு சந்தர்ப்பங்களிலோ அயலவர்கள் எவராவது ஒருவரை ஒருவர் எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேரிட்டால் அகமும் முகமும் மலரப் புன்னகை செய்து இரத்தினச் சுருக்கமாகச் சுகம் விசாரித்துக் கொள்வார்கள் அவ்வளவுடன் தத்தம் கருமமே கண்ணாகப் போய் விடுவார்கள். தெரு ஓரங்களிற் கூடி நின்று அரட்டை அடிப்பவர்களை இங்கு காண்பதென்பது முயற்கொம்பைப் பார்ப்பது போன்றிருக்கும். எவரும் தமது சொந்த மனப் பாரங்களை மற்றையோர் முன்காட்டிக்கொள்வதில்லை. குதூகலமாக உரையாடும் பண்பினராகவே காட்சி தருவர்.

### பிள்ளை வளர்ப்பு முறைகள்

அமெரிக்க மக்கள் தமது குழந்தைகளை மிகவும் கண்டிப்புடன் வளர்க்கிறார்கள். கடமை, கண்ணியம், கட்டுப் பாடுகளைப் பிள்ளைகள் சிறு பராயத்திலேயே கற்றுக் கொண்டு விடுகின்றனர். அந்தந்த வயதில் அந்தந்த வேளைகளில் அந்தந்தக் கடமைகளைச் செய்யப் பழகி விடுகிறார்கள். சிறார்கள் வளர வளரப் பெற்றோர்களும் அவர்கள் மீது தமக்குள்ள பிடிகளைத் தளர்த்திக் கொள்கின்றனர். அவர்களைச் சுதந்திரமாகச் சிந்திக்கவும் வாழவும் அனுமதிக்கிறார்கள்.

இங்கு சிறு வயதினர் அடித்து வளர்க்கப்படுவதில்லை. தாய் தந்தையர் கூட எக்காரணத்தை முன்னிட்டும் பிள்ளைகளுக்கு அடிக்க முடியாது. ஆனால் அடித்துத் தண்டிக்கப்படுவது பற்றிய முறைப்பாடுகள் கிடைப்பின் பெற்றோர் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாகி விடுவர். வயது வந்தோர் கல்யாணப் பருவத்தில் தமது வாழ்க்கைத் துணையைத் தாமே தேடிக் கொள்கின்றார்கள். அவர்களது அந்த உரிமையிலும் பெற்றோர் தலையிடுவதில்லை. இலங்கையில் தமது வயது வந்த பிள்ளைகளுக்குப் பெற்றோர்களால் ஒழுங்கு செய்து வைக்கப்படும் திருமணங்கள் அனைத்தும் ஏதோ நடக்கக் கூடாத கட்டாய பலவந்தத் திருமணங்கள் என அமெரிக்க மக்கள் பார்வையிற் படுகின்றது.

### நேர ஒழுங்குகள்

நேர ஒழுங்குகளிலும் அமெரிக்க மக்கள் மிகமிக நிதானமானவர்கள். பக்கத்து வீட்டுக் காரரிடம் போகவேண்டியிருந்தால் கூட முன்கூட்டியே தொலைபேசிமூலம் கதைத்து நேரம் ஒதுக்கி விடுவது அவர் தம் நடைமுறையாகும். ஒருவருடைய சந்திப்பு சரியாக உரிய நேரத்திற்கு நிகழ்ந்து விடும். கலியாண வைபவங்கள் நேரக்கட்டுப்பாடுகளுக்கமைய நடைபெற வேண்டும் என்பதற்காக முன்கூட்டியே ஒத்திகை நடத்திப் பார்க்கும் வழக்கம்கூட இங்குள்ளவர்களிடம் உண்டு. முடிவெட்டிக் கொள்வதற்குச் சிகை அலங்கார நிலையத்துக்குப் போகவேண்டியிருப்பினும் தொலைபேசி மூலம் நேரம் குறித்து ஒதுக்க வேண்டும் என்பதுஅவர்கள் நடைமுறை.

அலுவலகங்களில் வாரத்துக்கு நாற்பது மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும் என்றால் ஒருவர் தாம் செய்யும் வேலைக்குக் கணக்குக் கொடுத்தேயாக வேண்டும். ஒழுங்காக அலுவலகம் போய் கைபொப்பமிட்டுவிட்டால் எப்படியும் மாதம் இருமுறை சம்பளம் கிடைக்கும் என்கிற நிலை அமெரிக்க நிர்வாகத்தில் இல்லை.

நாட்டின் முன்னேற்றம் மக்களின் நேர்மையான விசுவாசமான கடின உழைப்பின் மூலமே கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது எனலாம்,

அமெரிக்காவில் என்னைக் கவர்ந்துள்ள இன்னோர் அம்சம் யாதெனில் மக்கள் பொது இடங்களில் பேணிக்கொள்ளும் கௌரவமாகும். ஒவ்வொருவரும் மிகக் கண்ணியமாக மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து நடந்துகொள்கின்றார்கள். முண்டியடித்துக் கொண்டுஎவரும் எச்சந்தர்ப்

**செல்லப்பா நடராசா**

[ 8ஆம் பக்கம் பார்க்க]

# சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

### காத்தான்குடி விஜயத்தின் போது

# அரசியல் பாதையில் அஷ்ரப் சந்தித்த மோசமான எதிர்ப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருவார காலத்துக்குள் இடம் பெற்ற இரு சம்பவங்களில் மூன்று பொலீஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊடுருவிய விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இவர்கள் கொல்லப்பட்டனர்.

பாலமீன்மடு என்னுமிடத்தில் விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானார்.

## மட்டக்களப்பு மடல்

-உதயசாந்தி-

பொலீஸாரின் பதில் துப்பாக்கி வேட்டுக்களுக்கு பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் இடம்பெற்று 3ஆம் நாள், காலை மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி செங்கலடி பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

சுமார் 10 பேர் கொண்ட விடுதலைப்புலிகள் அணியினர் பொலீஸ் காவல் நிலைய வீதித்தடையில் கடமையில் இருந்த பொலீஸார்மீதுமேற்கொண்ட தாக்குதலில் இரு பொலீஸார் கொல்லப்பட்டனர்.

மற்றுமொரு பொலீஸ் கான்ஸ்டபிள் காயமடைந்தார்.

இரு தரப்பும் சுமார் 15நிமிடங்கள் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதங்கள் இல்லை. 7 வயதுச் சிறுவன் உட்பட இரு பொது மக்கள் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடி நொச்சி முனையில் பூபாலரெட்ணம் இன்பராஜா என்ற 30 வயது வாலிபர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முன்னாள் ரெலோ உறுப்பினரான இவர் சில மாதங்களுக்கு முன்பு தான் மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து நாடு திரும்பியிருந்தார்.

இராணுவ புலனாய்வுத் துறையுடன் இணைந்து செயற்பட்டஇவர் விடுதலைப் புலிகளினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இலங்கைக்கான பிரித்தானிய தூதராக அண்மையில் பதவியேற்றுள்ள செல்வி லிண்டா ஒபில் வடக்கு — கிழக்கு மாகாண நிலைவரங்கள்குறித்துஆராய்வதற்காக ஆரம்பித்துள்ள விஜயத்தின் முதலாவது கட்டமாக அண்மையில் மட்டக்களப்புக்கு வருகை தந்தார்.

அவருடன் பிரித்தானிய தூதரகத்தைச் சேர்ந்த இரு கேணல்களும் இரு பிரிகேடியர்களும் வருகை தந்திருந்தனர்.

இக் குழுவினர் சமூக, சமய அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளையோ அல்லது சிவில் அதிகாரிகளையோ சந்தித்துப் பேசவில்லை.

மூன்றாவது படைப்பிரிவின் தலைமையகத்தில் பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ஏ. ஆர். ஸக்கியை மட்டுமே சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் உரையாடி விட்டு அம்பாறைக்குத் திரும்பி விட்டனர்.

இச் சந்திப்பில் —

★ மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைவரம்.

★ தமிழ் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள்.

★ தமிழ் அமைப்புகளின் சட்டவிரோத நடவடிக்கைகள்.

★ அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள்.

★ விடுதலைப் புலிகளின் [illegible]

(11 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரொலி...
-இடியன்-

● பாவனையின்றி, பதினோராயிரம் போத்தல் கள் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

★ இப்போதெல்லாம் சாதாரண காற்றுக்குக் கூட மரங்களெல்லாம் வெறியாட்டம் ஆடுவதற்கு இத்தகைய கள் 'பாசனம்' தான் காரணமோ?

● ஆசிரியர்களுக்கு மிதிவெடி பற்றிய கருத்தரங்கு.

★ கருத்தரங்கின் போதாவது அவர்கள் தூங்காமல் விழித்துக்கொண்டிருப்பார்களா? எனக் கேட்கின்றனர் பாதிப்புற்ற மாணவர் சிலர்.

● வெங்காயக் கொள்வனவில் முறைகேடு; விவசாயிகள் ஆர்ப்பாட்டம்.

★ வெங்காயத்தில் கைவைத்தால் யாருக்குமே எரிச்சல் வரத்தான் செய்யும்!

● வன்னியிலிருந்து திரும்பிய மாணவர் சிலர், பாடசாலை அனுமதி பெறுவதிற் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

★ வன்னியிலிருந்து வருபவர்களைப் பாடசாலை நிர்வாகிகள் அந்நியர் என்று கருதுகின்றார்களோ!

● மடு உற்சவகாலப் பணிமனையில் பொலீஸார் ஆயுதபாணிகளாகவே கடமையாற்றுவர்.

★ மடுமாதாவின் அருளை நாடுபவர்கள் 'பய' பக்தியுடன் செல்லவேண்டும் என்பதற்காகப் போலும்!

● மீளக் குடியமர்ந்த பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரிப்பு.

★ திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது — அதை எட்ட நின்று திட்டும் கூட்டம் திட்டிக்கொண்டே இருக்குது.

● தென் மாகாணத் தேர்தலையடுத்து ஜனாதிபதியைச் சந்தித்த ஆளுங்கட்சி உறுப்பினர் சிலர், பொதுத்தேர்தலை விரைவில் நடத்தும்படி கோரியுள்ளனராம்.

★ உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆகிவிட்டது; அது மேலும் தேய்ந்து ஊசிமுனையாவதற்கு முன்னர் தேர்தலை நடத்தினால் வெற்றி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போ?

● செம்மணியிற் புதைகுழி தோண்டப்பட்டபோது உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புக்கள் சிலவற்றின் பிரதிநிதிகளும் பிரசன்னமாயிருந்தனர்!

★ உள்நாட்டு வெளிநாட்டு பிரதிநிதிகளே! உண்மையை நிலைநாட்ட உதவுங்கள்!

● முன்னாள் தளபதி தளுவத்தவுக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்கள் திடீர் நீக்கம்!

★ தளுவத்த, தள்ளுவத்த ஆனதற்கு 'இரத்த' அழுத்தந்தான் காரணமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாப் பொருளைப் பேசுவதற்குத் துணிந்த இரண்டு நாடகங்கள்

யாழ்ப்பாணத்தில் எண்பதுகளின் பின்னர் நாடகஅரங்கு தனது பிரதானமான தளமாக அரசியலைக் கொண்டு அமைக்கப்பட்டு வருகின்றது. 'அரசியல் அரங்கு' என்ற வகையில் மேடையேற்றப்பட்ட நாடகங்களுள் பிரதானமாக மண் சுமந்த மேனியர் I, II ஐயும் உயிர்த்த மனிதர் கூத்து என்ற நாடகத்தையும் குறிப்பிடலாம்.

தமிழர் பிரச்சினையும் அதற்கு முகம் கொடுத்து எழுச்சி கொள்வதையும் உணர்ச்சியோடு பேசிய இந்த அரசியல் அரங்குகள் இன்று தொலைந்து போயினவா? நெருக்கடி நிலையில் கூடத் தன் ஆத்ம படைப்பைத் தரும் கலைஞர்கள் எங்கே? இவர்களுடன் கிடந்த உள்ளத்து உணர்ச்சிகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விகள் எழுகின்றன. இவ்வேளையின் சூழலானது காலப்படைப்பை பிரசவிக்க விடாது தடுக்கின்றதா? என்ற ஐயப்பாடும் எழுகின்றது. இதையே காரணமாகக் கூறிக்கொண்டு இருப்பதைத் ''தப்பித்தல் மனோபாவ'' தந்திரமா? என்றும் நோக்கத் தோன்றுகின்றது. அண்மைக் காலமாக யாழ். பல்கலை மாணவர்களால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படும் நாடகங்கள் இன்றைய வாழ்வில் யதார்த்த தரிசனங்களை உயர்வான படைப்பாகத் தருவதாக அமைகின்றன.

ஒரு பத்திரிகை தணிக்கையை எவ்வாறு கெட்டித்தனமாக வெல்லுமோ அதே பாணியில் இந்தக் கலைஞர்கள் புதிய உத்தி முறைகளையும் குறியீட்டு உத்திகளையும் பயன்படுத்தி இன்றைய சூழலுக்கு ஏற்ப திறமையைக் காட்டி உள்ளார்கள். அரங்கத்துறை சார்ந்தோர் நிறையவே அறியவும் கற்கவும் இவை வழிசமைக்கின்றன.

இந்த வகையில் விஞ்ஞான பீட மாணவர்களால் மேடையேற்றப்பட்ட இரு நாடகங்களான

★ அசோகவனம்
★ சடங்குகள் நீத்த தகனம்

ஆகிய நாடகங்கள் பற்றி இங்கு பேச விழைகின்றேன்.

**கலைச்சுடர்**

அசோக வனத்தில் இராவணனால் சிறைவைக்கப்பட்ட சீதை இராமன் தன்னை மீட்க வருவான் என்று காத்திருக்கும் வேளை, அனுமன் சென்று கணையாழி ஒன்றைக் கொடுத்து இராமன் வரவை அறிவிக்கின்றான். இந்த ஐதீகத்தை அடியொற்றி ''அசோகவனம்'' நாடகம் அமைக்கப்பட்டுள்ளது.

மேடை திறக்கப்படும் போது ''சிறைச்சாலையின் தோற்றமும் கைதிகள் பலரும் காணப்படுவர். அவர்களுக்கு விசேட அட்டைகள் வழங்கப்படும் போது தாம் ''இது நாங்கள்'' என்ற எண்ணம் மனதைத் தைக்கின்றது. இது கற்பனை நிறைந்த சிறந்ததொரு படிமம்,

கைதிகளாக உள்ளவர்களுக்கு திடீரென பட்டாடைகள் கொடுத்து அலங்கரித்து வெளி நாட்டிலிருக்கும் படம் எடுக்க அனுமதிப்பதும் அவர்கள் சென்றதும் மீண்டும் பிடுங்குவதும் மனங்கழிக்கும் போது கூட அடையாள அட்டையின் தேவையைக் காட்டலும் பார்ப்போர் மனங்களில் யதார்த்தங்கள் பலவற்றை நீண்ட திரையில் நெருடேரம் ஓடச் செய்தது. நீண்ட கயிற்றில் உலாவும் இருவர் மக்களுக்கு சுமையைக் கொடுப்பதும், சொத்தில் பங்கு கேட்கும் பிள்ளையை காணாத தாய் பெயர்பட்டியலில் பிள்ளையைத் தேடுவதும் போன்ற நீல ஆட்சி மேடையில் சிறப்பாகக் காட்டப்படுகின்றது. அரங்கியல் துறைசாரா இவர்களிடம் கற்பனையும், துடிப்பான முயற்சியும் இருப்பது ஆரோக்கியமானதாகும்.

**தே. தேவானந்**

அடுத்து விஞ்ஞான வார நிகழ்வில் முதல் இடம்பெற்ற ஸ்ரீ சேதுபரனின் நெறியாள்கையில் உருவான ''சடங்குகள் நீத்த தகனங்கள்'' நாடகத்தில் பல கற்பனை உத்திகளை யதார்த்த நிலையைக் காட்ட பயன்படுத்தி உள்ளார்கள், ஆக்க பூர்வமான ஒன்றுக்காக உழைக்கின்ற மக்கள் கூட்டம் அதிகாரத்தின் திட்ட (11 ஆம் பக்கம் பார்க்க)

# 'போர்க்கோஷம் IV'...

(6 ஆம் பக்கத்தொடர்)

பற்றி எதுவும்தெரியாதநிலையில் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் உயிலங்குளம் நோக்கிவந்தசிலரை ஆண்டான் குளத்தில் வைத்து மறித்த படையினர் அவர்களது சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும் பறித்து வைத்துக்கொண்டு அவர்களையும் மன்னாருக்கு அனுப்பி வைத்துவிட்டனர். இதில் பரிதாபம் என்னவென்றால் வந்த சைக்கிள் காரரும், மோட்டார் சைக்கிள் காரர்களும் பயணிகளால் வாடகைக்குஅழைத்து வரப்பட்டவர்களே தவிர அவர்கள் வவுனியாவுக்கோ மன்னாருக்கோ போகவேண்டுமென்று வந்தவர்களல்லர். தற்போது இவர்கள் தங்கள் வருமானத்துக்குஓரேவழியாக இருந்த வாகனங்களையும் இழந்து, தமது குடும்பத்தவர்களையும் பிரிந்து தவித்துப் போயிருக்கிறார்கள்.

பின்னர் கடந்த 18 ஆம் திகதி போக்குவரத்துக்காகப் பாப்பாமோட்டையூடான பாதையொன்று திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பயணிகள் சோதனை நிலையம், உணவுப் பொருள்களை லொறிகளில் மாற்றி ஏற்றும் நிலையம் என்பன உயிலங்குளத்திலிருந்து பாப்பாமோட்டைப் பகுதிக்கு மாற்றப்பட்டு வருகின்றன. இதன்படி இனிமேல் மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளிலிருந்து செல்லும் பயணிகள் உயிலங்குளமூடாக, அடம்பன், பாப்பாமோட்டை வரை அழைத்துச் சென்று விடப்படுவர். பின்னர் அவர்கள் மனித நடமாட்டமில்லாத 4 மைல் தொலைவைக் கால்நடையாகவோ, சைக்கிள்களிலோ கடந்து பள்ளமடுவிலுள்ள புலிகளின் பகுதியை அடையவேண்டும்.

இவ்வாறான கஷ்டத்தின் மத்தியில் 'போர்க்கோஷம்-V' விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்ததாக இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் இதுவரை கிழக்குப் புறமாக முன்னேறிய படையினர் இனிமேல் தமது முக்கிய இலக்காக வடபகுதியை நோக்கி—மன்னார்—சங்குப்பிட்டிப் பாதையில் முன்னேறப் போகிறார்கள். அதற்காகப் புலிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனராம்.

சாதாரண கிராமவாசிகள் வயது 'வித்தியாசமின்றிப் போர்ப்பயிற்சி வழங்கப்பட்டு எல்லைப்படை, கிராமப் படை என்பன அமைக்கப்பட்டுள்ளதாம். இதன்படி குறிப்பிட்ட பயிற்றப்பட்ட கிராமவாசி மாதத்தில் ஒரு வாரம் எல்லைக் காவலையோ, கிராமக் காவலையோ மேற்கொள்ளவேண்டும். அவர்களுக்குப் புலி உறுப்பினர்களுக்கான அதே ஆயுத, தொலைத்தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாம். எல்லையிலும் கிராமத்திலும் காவல் கடமையிலிருக்கும் இவர்கள் இராணுவ நடமாட்டம் தெரிந்தால் புலிகளின் உறுப்பினர்களுக்கு அறிவித்தால் போதும் புலிகள் வந்து புகுந்து விளையாடிவிட்டுப் போய்விடுகிறார்களாம்.

இவ்வாறான ஏற்பாட்டுக்கு மத்தியில் 'போர்க்கோஷத்தின்' அடுத்த கட்டத்தைத் தொடரும் எண்ணத்தில் படையினர்இருக்க—பறிபோன நிலங்களைப் பறித்தெடுக்கும் முயற்சிகளில் புலிகள் மும்முரமாக இருக்கிறார்கள்.'

என்ன நடக்கப்போகின்றது என்பதை அடுத்த... அடுத்த—வாரங்களில்தான் அறிய முடியும். ★

# ஈதல் இசைபட வாழ்ந்த சிறப்புக்கு உரியவர் வைத்திய கலாநிதி நடராசா

ஈதல் இசைபடவாழ்தல் என்ற வள்ளுவ தத்துவத்துக்கமைய, சமூகத்தில் பலதரப்பட்ட மக்களிடத்தும் மனித நேயம் பூண்டு வாழ்ந்தவரே, அமரர் நடராசா அவர்கள். அவர் வாழ்ந்த சமூகத்தில் உள்ள எல்லாமட்ட மக்களிடத்திலும் அன்பு பதிவு,

**நீத்தார் நயப்புரை**

கருணை உள்ளவராக வாழ்ந்து வந்ததும் யாவரும் அறிந்ததே. தாமும் சிறப்பாக வாழ்ந்து, தம்மைச் சூழ உள்ளவர்களும் சிறப்பாக வாழ வழிகாட்டியாக இருந்தவர் அமரர் ஆ நடராசா அவர்கள்.

அவருடைய வைத்திய சேவையின் போதும் சரி அல்லது பொதுத் தொண்டின் போதும் சரி காட்சிக்கு எளியனாக, கனிந்த சொல் பேசுபவனாக, கருணாமூர்த்தியாக காணப்பட்டார். காலையிலோ மாலையிலோ அல்லது இராத்திரிவேளையிலோ அவரது உதவியை நாடிப் போவோம். மனம் கோணாது என்ன ஏது என்று விசாரித்து தக்க ஆறுதல் கூறி வழி அனுப்பும் சுபாவம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

1942 இல் வைத்திய கலாநிதிப்பட்டம் பெற்று, சொந்தக் கிராமமாகிய சுன்னாகத்தில் தொழிலை ஆரம்பித்தார். தந்தை ஒரு சுதேச வைத்தியர். அவரின் அனுசரணையுடன் வைத்தியம் ஆரம்பித்து அயராது சேவைசெய்து வந்தார். படிப்படியாக வைத்திய நிலையம் ஆல் போல் தழைத்து அருநிழல்போல்வேர் ஊன்றியது. 1963 இல் தங்குமிட வசதி கொண்டதாக மலர்ந்து, இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இங்கு மருந்துகள் தயாரிக்கும் பிரிவும் சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியத்துக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்த இவரை, இவரது தனித்திறமையைப் பாராட்டி, கைதடி சுதேச அபிவிருத்திச்சபை 'வைத்திய ரத்தினம்' என்னும் கௌரவ சிறப்புப்பட்டத்தை வழங்கி வாழ்த்தியது. அத்தோடு அன்றையதினம் பல



ராலும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

குடும்ப நலனிலும் அவர் கவனக் குறைவாக இருந்தாரில்லை. பிள்ளைகள் யாவரும் தத்தம் துறையில், தனித்துவம் பேணி சிறப்புறத் தொழில் புரிவது கண்கூடு.

வள்ளுவரின் இன்னொரு குறளுக்கு இலக்கணமாக அவர்தம் பிள்ளைகளுடைய தன்மை அமைந்திருப்பதையும் காணலாம்.

'மகன் தந்தைக்காற்றும்உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்'

மக்கள் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு, இவர்களின் தந்தை இவர்களைப் பெற என்ன தவம் செய்தானோ? என்று பிறர் புகழ்ந்து கூறுமாறு ஒழுகுதலாகும்.

**வி. அரியநாயகம்**

பட்டம் வாங்காத சமாதான நீதிவானாக அவர் விளங்கியதை பலர் அறிய மாட்டார்கள். அவர் வாழ்ந்த சமூகத்தில் பரபரப்பில்லாமல், அடக்கமாக, பாரபட்சமில்லாது, நடுநின்று மக்களிடையே நல்லிணக்கம் மலர வேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பட்டு சமாதான நீதிவானாக செயற்பட்டார்.

அரசியலில் அவர் ஆரம்பத்தில் இடதுசாரிக் கொள்கை கொண்டவராகவும், காலப் போக்கில் காலநேர வர்த்தமான மாற்றங்களினால் கொள்கைகள் மாற்றமடைய தமிழ் மக்களுக்கு சுயாதீனமாக அரசியல் தத்துவம்தான் சிறந்தது எனக் கண்டறிந்து தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொண்டார்.

அவரது 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய அனைவரும், அன்னாருக்கு நினைவாலயம் ஒன்று சுன்னாகத்தில் எழுப்பப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தத் தவறவில்லை. அவ்வாறான நினைவாலயம் எழுப்பப்படுவது அன்பர்கள், ஆதரவாளர்களையும் காலத்தையும் பொறுத்தது. ★

# வகுக்கப்பட்ட.....

(ஏழாம் பக்கத் தொடர்)

பத்திலும் செல்வதையோ, கருமமாற்றுவதையோ என்னால் அவதானிக்க முடியவில்லை.

## கல்வி வசதிகள்

நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு அதன் கல்வி முறைகளும் மிகப்பெரிய அளவில் உதவி புரிகின்றன. பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் வழமைபோலப் பகலில் இயங்குகின்றன. ஆனால் தொழில் புரிபவர்கள், வயது வந்தவர்கள் அலுவலகங்களிலிருந்து வீடு திரும்பிய பின் மாலையில் பல்கலைக்கழகத்துக்குச் சென்று தமது உயர் கல்விப் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளுகின்றார்கள். இவர்களுக்கான விரிவுரைகள் இரவு பத்து மணி வரையும் உண்டு. ஆனால் நூலக ஆய்வு வசதிகளோ நள்ளிரவு வரை கிடைக்கின்றன.

எவரும் எந்தப் பட்டப் படிப்பையும் எந்த வயதிலும் மேற்கொள்ள வசதிகள் உள்ளன. பலர் தமது முதுகலைமாணிப் படிப்புக்களை இவ்விதமே பூர்த்திசெய்து கொள்கின்றனர் திறமையும் தகுதியும் ஆர்வமும் உடையவர்கள் தமக்கு விரும்பியதுறைகளிற் கற்றுமுன்னேறிவிடுகிறார்கள். ஆனால் பல்கலைக்கழகப் படிப்புகள் மாத்திரம் இங்கு இலவசம் அல்ல. இங்கு சிறுவர் முதல் முதியோர் வரை சகலருக்குமான கல்வி வசதிகளைஅபாரம்அற்புதம்என்றே வர்ணிக்கத் தோன்றுகிறது. சின்னஞ் சிறு மழலைகளுக்கான நூலக வசதிகளை இங்கு பார்த்து என்னால் பிரமிப்படையாமல் இருக்க முடியவில்லை.

## சட்டமும் வாழ்வும்

மக்களுடைய வாழ்க்கை முறைகள் கடுஞ்சட்டதிட்டங்களுக்குட்பட்டவை. அவற்றிலிருந்து எவரும் அறவே நெகிழ்ச்சித் தன்மையை எதிர்பார்க்க முடியாது. இங்குள்ள சுகாதார விதிமுறைகளின் படி வீதிகளில் உமிழ்வதே மிகப்பெரிய குற்றம், வளர்ப்புப் பிராணிகளை வைத்திருப்பவர்களுக்கு அவற்றின் எச்சங்களைத் தம் சொந்த வளவுகளிலேயே புதைக்க அனுமதி இல்லை. பதின்னான்கு வயதுக்குட்பட்ட, குறிப்பாகச் சிறு பிள்ளைகளைப் பெற்றோர் வீட்டில் தனிமையில் விட்டு வெளியில் செல்வதைச் சட்டம் அனுமதிப்பதில்லை. சிறு வயதினர் சைக்கிள் ஓடும் பொழுது தலைக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்பது கூட விதிகளுள் அடங்குகிறதெனில் அனைத்து அம்சங்களையும் இங்கு கூறுவது அவசியம் அற்றதாகி விடுகின்றது.

கடும் கோட்பாடுகளை அமெரிக்க மக்கள் பின்பற்றுகிறார்கள் என்றும் கூறலாம் அல்லது அவற்றினால் அவர்கள் நெறிப்படுத்தப்பட்டுக் கட்டிக்காக்கப்படுகிறார்கள் என்றும் கொள்ள இடம் உண்டு. எது எப்படி இருப்பினும் மக்கள் நாட்டிற்குகந்த மிகச்சிறந்த ஏற்பாடுகளுக்குள் வாழப்பழகிக் கொண்டிருக்கிறார்கள் என்று மட்டும் கணிக்க முடிகின்றது,

வசந்த காலத்தில் மரங்கள் எல்லாம் தளிர்த்துப் பூப்பது இந்தநாட்டில் கண்கொள்ளாக் காட்சியாகும். மக்கள் மலர் விருட்சங்களை நட்டு வளர்ப்பதில் நாட்டமுள்ளவர்கள். அலுவலக வியாபார வளவுகள் கூட பெரும் பெரும் மலர் விருட்சங்களால் நிரம்பிக்காணபடுகின்றன.

தேசத்தின் நலன்கருதி ஆங்காங்கே ஒதுக்கிவிடப் [11 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆவரங்காலிலுள்ள கடையில் திருட்டு

அச்சுவேலி, ஜூன் 20

ஆவரங்கால் சந்தைக்கு முன்பாக உள்ள பல்பொருள் வியாபார நிலையத்தின் கூரை இரவு வேளையில் பிரிக்கப்பட்டு உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நாகபூசணி பல்பொருள் வர்த்தக நிலையத்தில் இருந்தே கடந்த புதன் இரவு கண்டோஸ் வகைகள், குளிர் பானங்கள், உட்பட உணவுப் பொருள்கள் களவாடப்பட்டிருப்பதாக உரிமையாளர் க. தங்கராசா அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த வாரத்தில் முன்னரும் ஒருதடவை கடையின் கூரையைப்பிரிக்கமுயற்சிக்கப்பட்டதாகவும் முயற்சி கைகூடாத நிலையில் புதன் கிழமை இரவு இரண்டாவது தடவையாக கூரையைப் பிரித்து உள்ளே இருந்த பொருள்கள் களவாடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

(ஐ-11)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் இதுவரை நடைபெற்ற பல்வேறு கற்கை நெறிகளுக்குரிய சான்றிதழ்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் பிராந்திய நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டு வருவதாகப் புறநிலைப்படிப்புகள் அலகின் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

## கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் ''உதயன்'' நிறுவன ஆதரவுடன் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:

பிற்பகல் 4 மணி — ஆவரங்கால் மத்தி. வி.க. அணிஎதிர் நவோதயா வி. க. அணி.

பிற்பகல் 5மணி — தோப்பு இளைஞர் வி க.அணி எதிர் நீர்வேலி வி. க. அணி.

(க-ரி)

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி வருடாந்தப் பொதுக்கூட்டம் 1999

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி (சென் பற்றிக்ஸ் கல்லூரி) பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 18 - 07 - 1999 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அங்கத்துவத்தைப் புதுப்பிக்க வேண்டியவர்களும் இதுவரை அங்கத்தவராகச் சேராத பழைய மாணவர்களும் செயலாளர், உப செயலாளர் அல்லது பற்றீசியன் இன்ஸ்ரிரியூட் பதிவாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

பி. பெனடிக்ற்
செயலாளர்

(66737)

KOBE KOBE KOBE KOBE KOBE

பணத்தைத் திருப்பி பெறும் உத்தரவாதம்

நம். 1
இலங்கையில் அதிகளவு விற்பனை

KOBE
UHF/VHF கலர் T.V பூஸ்டர்

• இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
• வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
• விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை

KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு

பூஸ்டர்கள்
சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு தனியான அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்

விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT

அன்டனா நிபுணர்கள்:
LANKA NIPPON ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736

Finally it is KOBE you will settle for ........!
must be KOBE ...... the Original

" நிப்பொனின் " சகோதர நிறுவனம்

KOBE KOBE KOBE KOBE KOBE KOBE

(சி/7903)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### வெள்ளிவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

இசை அரங்கு

1999 - 06 - 20 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

நிகழ்ச்சி நிரல்

தமிழ் வாழ்த்து

தொடக்கவுரை:
பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்
விஞ்ஞானபீடாதிபதி

வாழ்த்துரை:
திரு. சீ. ஜெயரட்ணம்
பேரவை உறுப்பினர்

இசை அரங்கு காலை 9. 30 மணி – 12. 30 மணி

அரங்கிசை:
திருமதி மேரி சரோஜா ஜஸ்ரின்
(9. 30 மணி முதல் 10. 30 மணி வரை)

பக்கவாத்தியம்:
மிருதங்கம்: திரு. எஸ். மகேந்திரன்
வயலின்: திரு. கா. குகபரன்

கலாபூஷணம் எல். திலகநாயகம் போல்
(10. 30 முதல் 12. 30 மணி வரை)

பக்கவாத்தியம்:
மிருதங்கம்: திரு. எஸ். துரைராஜா
வயலின்: திரு. கி. பத்மநாதன்

பிரவேசம் இலவசம்
ஆர்வலர் அனைவரும் வருக!

(சி/7939)

பறாளாய்ப் பதியில் பவனி வந்திடுவீர்! பலனை நேரில் தந்திடுவீர்!!

## இன்று (20-06-1999) சுழிபுரம், பறாளாய்

## ஈசுர விநாயகரின் தேர்த் திருவிழா

(66671) - சோழியூரான் பிறைசூடிக் குரு.

ஓம் முருகா! ஓம் முருகா!! ஓம் முருகா!!!



கடந்த 32 ஆண்டுகளுக்கு மேல் தெய்வீக வழிபாட்டுக்குத் துணைபுரியும்

காவடி மார்க் கற்பூரம்



யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்

விநியோகஸ்தர்கள்:
PRABA TRADING Co.
31, GABOS LANE,
COLOMBO - 11.
Tel. 329426 Fax. 422750

நின்று நிலைக்கும் ஜோதியை காவடி மார்க் கற்பூரம் என்றும் தரும்!

(சி/7932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சணல் ஆடுகள், வரன் கோழி, கினிக் கோழியும் குஞ்சுகளும், மணித்தாராவும் குஞ்சுகளும், 45 நாள் பூர்த்தியான பொமனேரியன் நாய்க் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி அரசடி மகாவித்தியாலயம் அருகில். (66707)

தரமான ஒரு மாதக் குஞ்சுகளும் 15 நாள் குஞ்சுகளும் ஐந்து நாள் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு இல. 68, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (66706)

மந்துவில் மேற்கில் மா, பலா, தென்னை மரங்களுடன் கூடிய சகல வசதிகளுமுடைய 9¼ பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.11, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (66673)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. கிலோ 155 ரூபா. சுத்தம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் பிறிமா அடை முட்டைகளும் உண்டு. ஒருவாரத்துக்கு முன் பதிவு செய்யவும். இல. 21, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (66730)

தனிக்கறுப்பு (Pure Black) பொமனேரியன் நாய்க்குட்டி, புறோயிலர் கோழிக்குஞ்சு, கோழிகள் வளர்க்கக்கூடிய கூடு என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 9, பிளைச்சர் ஒழுங்கை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் (66725)

## தவறிவிட்டது

செல்லத்துரை சந்திரராசா ஆகிய எனது விசேட, வேலை அடையாள அட்டைகள் கொக்குவிலுக்கும் மல்லாகத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அளவெட்டி மல்லாகம், கூ. சங்கக்காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். [66735)

சரசாலை மேற்கைச் சேர்ந்த சிவராசா ஜென்சி ஆகிய எனது விசேட அடையாள அட்டை இல 91022288 கனகன்புளியடியிலிருந்து கல்வயல் ஊடாக சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்குச்செல்லும் வழியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி சந்தை அலுவலகத்தில் ஒப்படைக்கவும். [சி/7938]

ஆஸ்பத்திரிவீதி, சங்கானையைச்சேர்ந்த சுப்பன் சின்னத்தம்பி ஆகிய எனது விசேட அடையாள அட்டை மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [66726]

ஊரெழு மேற்கு என்னும் முகவரியில் உள்ள கணேஷ் புனிதவதி என்பவரின் விஷேட அ. அட்டை 18 - 06 - 99 அன்று ஊரெழுவிற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலியிலுள்ள உழவர் களஞ்சியத்தில் கொடுத்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். (66740)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு: இல 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில் [66745]

## இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள்(பாதிக் கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மிக நுட்பமான நிறுவை. அத்துடன் அடை முட்டையும் வாழைக் குட்டிகளும் உண்டு. தொடர்பு (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [66632]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (66665)

இறைச்சிக்கோழி ((Broiler) இறைச்சிக்குகந்த கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (66676)

Broiler இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: லக்கி, மதவடி லேன், பலாலி வீதி, திருநெல்வேலி. (66697)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கோப்பாய் தெற்கு, தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் அருகில். (வ. வரதராஜா) (66744)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 53, மாதம் 9000/- சம்பளம் எடுக்கும் உயர்பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தருக்கு மணமகள்தேவை. தொடர்பு: விளம்பர இல 893, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [66721]

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பலவருடம் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு: மூன்று மணிக்குப் பின், R. பாலசுப்பிரமணியம், BSc (Cey) Dip. in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [66741]

## மணமக்கள் தேவை

பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா கனடா ஆகிய நாடுகளுக்கு வெளிநாட்டு உள்நாட்டு மணமக்கள் தேவை. பெண்கள் வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும். அபிராமி திருமண சேவை, ஆடியபாதம் சந்தை வீதி, 1 ஆம், ஒழுங்கை, கொக்குவில். (66739)

## வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டை வீதி. காக்குவில் மேற்கில் 7 பரப்புக்காணியில் ஐந்து அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எம்.பாலசுப்பிரமணியம், இல. 95, Colombo Street, Kandy. 08 — 233560.

## திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக்பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப் படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். உரிமையாளர், சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி, கன்னாதிட்டி சந்திக்கருகில். (66696)

## வியாழமாற்றம்

வியாழ, சனி மாற்றங்கள் ஜூன் 2000 வரை உங்களுக்கு எப்படி? எங்கும் விற்பனையாகிறது. ஜாதகம், குறிப்புகள், திருமணப் பொருத்தங்கள் பார்க்க நேரிலே சந்திக்கலாம். ''சத்யா'' B. L. G. தொலைபேசி சேவையருகே 3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (66715)

# 55 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சகபணியாளர்

திரு, க. தவராஜசேகர் அவர்களது

அன்புத் தாயார்

**திருமதி கணபதிப்பிள்ளை சரஸ்வதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தி அடைய இந் நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்

பளை,பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(சி/7941)

# JAFFNA COLLEGE

VADDUKODDAI

## FOUNDER'S DAY CELEBRATIONS

and

## PRIZE GIVING

to be held on

**Saturday the 26th June 1999 at 10-00 a. m**

in the College Quadrangle.

CHIEF GUESTS

Prof. V. Gunanantham

(Head of the Dept. of Surgery University of Jaffna)

and

Dr. Mrs. J. Ganeshamoorthy

(Head of the Dept. of Medicine)

will distribute the prizes.

Parents, Alumni and well wishers are cordially invited.

(C 7943) Principal, Staff & Students.

# முன்பள்ளி போதனாசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20 நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் பதிவு செய்துள்ள முன்பள்ளிப் போதனாசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதிவியாழக்கிழமைபிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-7)

# "நற்செய்தி அறிவிப்பு"

ஞாயிறு வாசகங்களின் தியானங்களும் சாதாரண நாள்களின் வாசக குறிப்புகளும் உண்டு. மூன்று பாகங்களும் மீண்டும் அச்சேற்றப்பட்டுள்ளன. அன்பிய குழுமங்களுக்கு உதவியாயிருக்கும்.

கிடைக்கும் இடங்கள்

திருவழிபாட்டு நிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
யோசேவாஸ் நிலையம்,
பொறளை, கொழும்பு - 8
அடைக்கலமாதா ஆலயம்,
4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(66660)

# ★ மோகன்ஸ் ★
# தொலைபேசி நிலையம்
# &
# ரைப்பிங் சென்ரர்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**குறைந்த கட்டணம்**

1) கொழும்புக்கு எடுக்க 1 நிமி. கோல் ரூபா – 6
2) கொழும்பில் இருந்து வரும் 1 நிமி. கோல் ரூபா – 4
3) இந்தியாவுக்கு 1 நிமி. கோல் ரூபா – 60
4) ஏனையநாடுகளுக்கு 1 நிமி. கோல் ரூபா – 100
5) வெளிநாட்டில் இருந்து வநம் கோல் ரூபா – 4

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பு, ரைப்பிங் செய்து கொடுக்கப்படும்.

மக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதே எமது சேவை

உங்கள் ஆதரவே எங்கள் வளர்ச்சி

எஸ். கணேசன்
உரிமையாளர்.

(சி/7927)

# நெஞ்சை விட்டகலாத நினைவுடன்



தோற்றம் 10 — 05 1930

மறைவு 21 — 05 — 1999

**திருமதி இராசையா இராமணி**

பெற்றாய், வளர்த்தாய், பேரிட்டாய்
நாம் மகிழ
அகிலத்தில் தெய்வம் நீயென்றோம்
ஆனந்த வாழ்வு தந்தாய் தாயே!
இன்று நின் பிரிவால்
மீட்கிறது எம்முள்ளம் முகாரியை......

''உயிர் அழியாதென்று''
உத்தம ஞானிகள்
உலகிற்கு உரைத்ததால்
உயிரோடு வாழ்கின்றோம்
உங்கள் நினைவுடனே......

ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

பாசமுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (66731)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலய பரிசளிப்பு விழா கடந்த வெள்ளியன்று அதிபர் வி. சிவஞானபோதன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் ஈ.பி.டி.பியின் வலிமேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதன் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா, யாழ். மின்சாரசபையை சேர்ந்த பொறியியலாளர் சி. வேலுப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். [இ–7]

## விண்ணப்பம் கோரப்படுகிறது

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பொறுப்பாளர், விஞ்ஞானம், சமூகக் கல்வி, சைவசமயம், கிறிஸ்தவ சமயம் (றோ. க), வாழ்க்கைத் தேர்ச்சி, உடற்கல்வி, விசேட கல்வி, முறைசாராக் கல்வி, வர்த்தகம், தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான முதன்மை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கு இலங்கை ஆசிரியர் சேவைத் தரம் இரண்டு ஒன்று, தரம் இரண்டு இரண்டைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் பாதையில்...

[7 ஆம் பக்கத் தொடர்]

★ மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்கள் தொடர்பாகவே பிரித்தானிய தூதரக அதிகாரிகள் கேட்டறிந்து கொண்டதாகத் தெரிய வருகின்றது,

### அஷ்ரப்பின் காத்தான்குடி விஜயம்

அதேநேரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் அண்மையில் காத்தான்குடிக்கு விஜயம் மேற்கொண்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காத்தான்குடியில் அமைச்சர் என்ற ரீதியில் அளிக்கப்பட்ட வரவேற்புகளுக்கு மத்தியில் அவரது அரசியல் கொள்கைக்கு அதிருப்தியாளர்களால் பாரிய எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் காத்தான்குடிக்கு வருகை தருவதற்கு ஒரு வார காலம் முன்பிருந்தே பல எதிர்ப்புப் பிரசுரங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

வடக்கு – கிழக்கு மாகாணம் இணைக்கப்படுமானால் அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கியதான தென்கிழக்கு மாகாணம் என்ற யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே காத்தான்குடி முஸ்லிம்களினால் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மாவட்ட அமைப்பாளர் மர்சூர் அகமது லெப்பை தனது ஆதரவாளர்களுடன் அமைச்சரின் வருகையின் போது அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்.

காத்தான்குடிப் பட்டணத்திலுள்ள சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன.

அமைச்சரின் வரவேற்பு ஊர்வலம் கபுறடி மைதானம் ஊடாகச் சென்று கொண்டிருக்கையில் கொடும்பாவி ஒன்று எரிக்கப்பட்டது.

கபுறடி மைதானத்தில் அமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்க குழுமியிருந்தவர்களைபொலீஸார் கண்ணீர்ப்புகை அடித்தும் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் கூடியிருந்தவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

விரட்டியடிக்கப்பட்ட அதிருப்தியாளர்கள் அமைச்சர் அஷ்ரப்புக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

அமைச்சர் அஷ்ரப் தனது கடந்தகால அரசியல் பாதையில் இதுவரை கண்டிராத எதிர்ப்பு என்று இதனை அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ★

## பேசாப் பொருளை...

(8 ஆம் பக்கத் தொடர்)

மிட்ட போக்கால் சிதைக்கப்பட்டு பாலியல் வல்லுறவுகள், கொலைகள், அதிகாரப் போட்டிகள் ஏற்படுகின்றன. அதனை ஆரம்பத்தில் மக்கள் உணரவில்லை மக்கள் உணர்ந்தபோது ஆதிக்க உருவம் மண்டை ஓடுகளாலும் எலும்புத் துண்டுகளாலும் அலங்கரித்த தனது உடையை பச்சை நிறத் துண்டினால் போர்த்திக்கொண்டு, ஏற்கனவே போர்த்திபிருந்த நீலத் துணியை இறுதியில் விலக்கிக்கொள்கிறது அந்த வேளை ''போர்வைகள் மாறினால் போதாது உள்ளங்கள் மாறவேண்டும்'' என்ற வசனம் பேசப்படுகிறது. தமிழர் பிரச்சனைக்கு அரசாங்கங்கள் மாறினால் மட்டும் போதாது என்பதனைத் தெளிவாகக்கூறியுள்ளார்கள். இந்த நாடகத்தில் காணப்பட்ட மிக அற்புதமான அம்சம், எறியப்பட்ட சொற்களும் செறிவான படிமங்களுமாகும். ஏமாற்றும் அரசியல் வாதிகள் ஆதிக்கவாதியால் கொடுக்கப்பட்ட ஒரு கதிரைக்கு அடிபடுவதும் அதற்குக்கொடுக்கப்பட்ட மிருதங்க ஓசையும் பற்பல செய்திகளை எமது செவிகளில் உரத்துச் சொல்லின.

மேடையின் வலது முன்பகுதியில் ஓர் அரச மரக்கிளையில் பச்சைநிறத் தொப்பிகள் தொங்கும் வண்ணம் தீட்டப்பட்டு கப்பலுக்குக் காத்து நிற்கும் மக்களை துரத்துகிறது. இது இன்றைய யதார்த்த நிலையை இலகுவாகப் படம்பிடித்து காட்டுவதாக அமைந்துள்ளது. அடுத்து மேடையில் இலகுவான எளிமையானகுறியீட்டு உத்திமூலம் பாலியல் வல்லுறவுக் காட்சி காட்டப்பட்டது. ஏவலாளன்ஒருவன் ஒருபெண்ணின் பின்னால் செல்கின்றான், அதன் பின் ஆதிக்க உருவம் ஒரு பூவை காம உணர்வோடு தொட்டு தடவி இறுதியில் கசக்கி எறிகிறது. எறிந்த அந்த பூவின் மேல் ஏவலாளன் ஒரு வெள்ளைத் துணியை விரிக்கின்றான். தன்னை ஒரு அப்பாவியாகக் காட்டிக் கொண்டுமக்களிடம் மடிப்பிச்சை எடுத்து ஆயுதங்களை வாங்கும் ஆதிக்கசக்தி கொலை நிகழ்த்துவதையும் வெள்ளைச் சேலைகளை மேடை எங்கும் விரிப்பதன் ஊடாக காட்டினார்கள். நாம் இன்று புதைகுழிகளின் மத்தியில் வாழ்கின்றோம் என்ற நினைப்பு அவ்வேளை தோன்றியது,

பொதியொன்று நீண்டகாலமாகக் காட்டப்பட்டு உடைக்கப்படும் வேளை எதுவுமற்ற வெறும்பெட்டியாக அமைவதை வெவ்வேறு அளவுகளினால் ஆன பெட்டிகளை எடுத்து எடுத்துவைப்பதன் ஊடாகக்காட்டினார்கள். இங்கு சொல்லப்பட்ட காட்டப்பட்ட அனைத்தும் பார்வையாளர்களின் மனங்களில் உள்ளவை என்பதை பார்வையாளரின் எதிர்விளைவில் இருந்து அறிய முடிந்தது.

பொருத்தமற்ற சூழ்நிலையில் பொருத்தமானவற்றைப் பேசத்துணிந்த விஞ்ஞானபீட மாணவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். அவர்கள் நாடகம் சார் முயற்சி மேலும் வளர வேண்டும். அவர்கள் தொடர்ந்தும் இம்முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதே மிகப் பலரினதும் விருப்பமாகும். ★

# வன்முறைகளும் கொலைகளும் எமது மண்ணில் தொடர்கின்றன

## பரிசளிப்பு விழாவில் ஆயர் உரை

யாழ்ப்பாணம். ஜூன் 20

எமது மண்ணில்வன்செயல்களும் கொடிய கொலைகளும் இன்னமும் தொடர்வதைப் பார்க்கின்றபோது எமது சிந்தனைகளில் நோய்கள் ஆரம்பிக்கின்றன.

இவ்வாறு யாழ். ஆயர் அதிவண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நாள் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் எஸ். தனபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:–

வன்செயலும் மரணமும் அன்றாடசம்பவமாகி விட்ட ஒரு சமுதாயத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வன்முறை கலாசாரத்தின் பார்வையாளராக நாம் இருந்து வருகின்றோம்.

ஒவ்வொரு முனைப்பிலும் வன்செயல்களும் வன்முறை உபகரணங்களுமே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை காண்பதில் முன்னணி வகிக்கின்றன,

இந்த வகையான மிகக் கொடூர மிக்க நிலைப்பாடுகளுக்கு பல்வேறு அரசியல் வர்ணங்களைக் கொண்ட அரசியல்வாதிகளே காரணம் என்பதில் சந்தேகமில்லை.

எம் மத்தியில் புகழ்மிக்க நான்கு சமயங்கள் இருக்கின்ற போதும் பேரழிவுகளைவிளைவிக்கின்ற வன்செயல்களை தடுத்து நிறுத்த முடியாதுள்ளது.

தொடர்கின்ற வன்செயல்களில் கொல்லப்படுகின்ற அப்பாவி மக்களை வாழும் சாட்சிகளாக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மக்கள் கைது செய்யப்படுவதையும் அவர்களுக்கு என்ன சம்பவிக்கின்றன என்பதையும் பல வருடங்களாக நாம் அறியாதுள்ளோம். அவ்வாறானவர்களின் இருப்பிடங்கள் எங்கே என்பது பற்றியோ அவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றியோ அறியாதவர்களாக இருந்து வருகின்றோம்.

தவறான பொய்யான தகவல்கள் மூலம் மக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் வன்முறை கலாசாரத்தினை நாம் புறந்தள்ளி அமைதி வழியை பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

எமது கல்லூரிகள் அனைத்தும் அமைதிக் கொள்கைகளை மாணவர் மனங்களில் பதிபச் செய்யவேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கற்கை நெறி பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் நடைபெற்று வந்த ''அலுவலக முகாமைத்துவம்'' 4 ஆவது அணியினருக்கான கற்கைநெறிப் பூர்த்தி விழா சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலைய தொடர்பாளர் போ. ஜெபக்குமார் பிரதம விருந்தினராகவும், புறநிலைப் படிப்புகள் அலகின் வருகை விரிவுரையாளர் கே. குமாரசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கிராமசேவகர் க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விரிவுரையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (இ-7)

## தேர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கொக்குவில் மாதனைக் கந்தசாமி கோயிலில் இன்று காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

## கப்பலில் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

பருத்தித்துறை துறைமுகத்தில் சஜிந்த, இந்துறுவலி ஆகிய கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

சஜிந்த கப்பலில் இருந்து அரிசி, பருப்பு முதலிய உணவுப்பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. இந்துறுவலி கப்பலில் இருந்து கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனம், சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான சிமெந்து இறக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறையில் வைத்து மாஹோ கப்பலில் தெற்கே கொண்டு செல்வதற்கான புகையிலை, வெங்காயம் என்பன ஏற்றப்பட்டு வருகின்றன.

இதேவேளை—

காங்கேசன் துறையில் நிற்கும் குமண கப்பலில் இருந்து அரிசி, பருப்பு என்பன இறக்கப்படுகின்றன. (இ–6)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூன் 20

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாவது சுற்றில் 'பி' பிரிவில் சென்றலைட்ஸ் அணியும், ஜொலி ஸ்ரார் அணியும் இன்று மோதவுள்ளன.

இந்தப் போட்டி இன்று காலை 9–15 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## ஆணைக்குழு அதிகாரி காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிட்டு அவர்களின் உறவினர்களால் வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பொருள்களை வழங்குவார். (இ–ரி)

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவினை முன்னிட்டு பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ்ப்பாணம் 'சிற்றி ரெக்ஸ்' நிறுவன ஆதரவுடன் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

பங்குபற்றவிரும்பும் கழக அணிகள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பதிவுகளைச் செய்துகொள்ளலாம் என்றும்—

அங்கேயே மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் உயர்தர மாணவர்களுக்காக நடத்தி வரும் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ந. தணிகாசலம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ச. பரமசிவமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் மூ ஒருமைப்பாட்டினையும் முரண்பாடற்ற மாணவ சமூகத்தையும் உருவாக்கும் நோக்குடன் இந்தக் கருத்தரங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (இ–க)

## மரணம்

ஐந்து மாதங்களுக்கு முன் விசர் நாயினால் கடியுண்ட ஒருவர், விசர்நாய்க் கடி நோய்க்கான ஏ. ஆர். வி. தடுப்பு ஊசிமருந்து போடாததால் விசர் நோய்க்கு இலக்காகி உயிரிழந்தார்.

குடத்தனை பொற்பதிப் பகுதியைச்சேர்ந்தசின்னையா மதுரைவீரன் (வயது 33) என்பவரே மரணமானவராவார்.

ஏற்புத்தடை ஊசியைமாத்திரம்போட்டுவிட்டுகவனயீனமாக இருக்கையில் கடந்த 15 ஆம் திகதி விசர்நோய் கண்டதும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

## வகுக்கப்பட்ட...

(8 ஆம் பக்கத் தொடர்)

பட்டுள்ள தோப்புக்கள் பலவற்றில் மான்களும் முயல்களும் பல நூற்றுக்கணக்கில் உலாவித்திரிகின்றன. அமெரிக்க மக்களுக்கு இவற்றை வேட்டையாடி உண்டு மகிழும் ஆசை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களது மனப்போக்குகள் உயர்வானவையாக உள்ளன.

மான்கள் குறுக்கே பாயக் கூடிய நெடுஞ்சாலைகளில் மின்னல் வேகத்தில் செல்லும் வாகனங்களின் நலன் கருதி எச்சரிக்கை அறிவித்தல்கள் போடப்பட்டுள்ளதைக் கண்ணுற்றேன். அமெரிக்க மண்ணில் மனித சுதந்திரம் மட்டுமல்ல மான்களின் சுதந்திரமும் பாதுகாக்கப்படுவதை எண்ணி எண்ணி வியப்படையாமல் இருக்க முடியவில்லை. ★


## வாழ்த்துகின்றோம்

கோண்டாவில் புனர்வாழ்வுக் களஞ்சிய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும்

**செல்வநாயகம் செல்வகுமார்**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை இட்டு வாழ்த்துகின்றோம்.

களஞ்சிய உத்தியோகத்தர்கள்.

(65758) கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளொட் அமைப்பின் வீரமக்கள் தினம்

## ஜூலை 13 முதல் 16 வரை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினால் (புளொட்) ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அமரர் அ. அமிர்தலிங்கம், முன்னாள் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோர் கொலை செய்யப்பட்ட நாளான ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம் புளொட் ஸ்தாபகரும், செயலதிபருமான க. உமாமகேஸ்வரனின் நினைவு நாளான ஜூலை 16 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள வீரமக்கள் தினத்தையொட்டி பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வீரமக்கள் தினத்தில் யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் புளொட் உறுப்பினர்களினால் இரத்ததானம் வழங்கப்படவுள்ளதுடன் யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலயப்பகுதி, யாழ். பஸ் நிலையப்பகுதி போன்றவை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படும் என்று புளொட் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராசா தெரிவித்தார்.

வீரமக்கள் தினத்தின் இறுதி நாளான ஜூலை 16 ஆம் திகதி வேலணை, சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையங்களில் நிழல் குடைகள் நிறுவப்படவுள்ளதுடன் அன்றைய தினம் ஏற்கனவே விண்ணப்பித்த நூலகங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கான புத்தகங்கள் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

(இ-5-ரி)

### சங்கானை...

[ஐந்தாம் பக்கத் தொடர்]

தங்கியுள்ள 16 குடும்பங்களுக்கும், சங்கானை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 74 குடும்பங்களுக்கும், சங்கானை மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 3 குடும்பங்களுக்கும்—

சுளிபுரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த 260 நிரந்தர குடும்பங்களுக்கும், சங்கரத்தைக் கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த 131 நிரந்தர குடும்பங்களுக்கும் —

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சுளிபுரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 12 குடும்பங்களுக்கும், சங்கரத்தைக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கியுள்ள 3 குடும்பங்களுக்கும் — இந்த நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

771 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வு நிவாரண கொடுப்பனவுக்குரிய 38 லட்சத்து 55 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் சங்கானை பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சங்கானை பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினரால் காசோலைகள் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-175)

### காணாமல்போன.,.

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மாணவர்கள் காணாமல் போன விதம் பற்றி அவர்களின் பெற்றோர்களிடம் விசாரிக்கப்பட்டது. (இ-5-ரி)


# DCS
## COLLEGE OF COMPUTER TECHNOLOGY

MICROSOFT APPLICATIONS

New Weekend Courses Commence on 26th June 1999

**Diploma in Office 2000 Application**

Duration: 6 MONTHS

**Course Modules**

WINDOWS 98 — EXCEL 2000
WORD 2000 — POWER POINT2000
ACCESS 2000

**Certificate Courses**

Duration: 2 MONTHS

MS WINDOWS 98 — MS DOS
MS WORD — PAGE MAKER
MS POWER POINT — d BASE III+
MS EXCEL — PASCAL
MS ACCESS — VISUAL BASIC

**For further details contact the undersigned,**

Director (Ad),
DCS, College of Computer Technology,
124/2, Palaly Road,
Thirunelvely.

DCS,
P.O. Box 144,
T.P.NO: 021-2596,021-2604
JAFFNA.

(66690)


### கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு ஜூன் 20

இடை நிலைக் கல்வி அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான செயற்றிட்டக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

(ஐ-152)

### ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழகத்திலுள்ள சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடக்குமுறைச் சட்டங்களும் பொய்ப்பிரசாரங்களும் சாம்பல் போல மூடி மறைத்திருந்தாலும் தமிழர்களின் உள்ளங்கள் கனல் போல தகித்துக் கொண்டிருக்கின்றன.

நீறுபூத்த அந்த நெருப்பு பெருந் தீயாக மூண்டுடமுன் செய்ய வேண்டிய கடமைகளை இந்தியா செய்தாக வேண்டும்—என்றார்.

(இ-5)

### தடயப்...

[முதலாம் பக்கத் தொடர்]

செய்யவுள்ளவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த தடயப் பொருள்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதும்—

இதற்கான அனுமதியை மன்னார் நீதிமன்றம் வழங்கியுள்ளதும் தெரிந்ததே.

(இ-7-164)

### அன்ரன்...

(முதலாம் பக்கத் தொடர்)

கத்தின் உறுப்பினர் அவர்.

பிக்குகள் உட்படப் பலரைக் கொன்று குவித்து, அரச சொத்துகளுக்குத் தீமை விளைவித்து வரும் கொடூர இயக்கமொன்றின்— இந்நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள அமைப்பொன்றின் —பேச்சாளராக அவர் செயலாற்றியுள்ளார். வெளிநாட்டவரான அவர் இந்நாட்டின் சட்டத்தை மீறியுள்ளார். தற்போது அவர் பிரிட்டனிலிருந்து அச் செயலைத் தொடர்ந்து செய்கின்றார்.

இந்நாட்டு சட்டத்தை மீறிய —கொடிய யுத்த குற்றவாளியான — பாலசிங்கத்திற்கு எதிராக உடனடியாக இந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டும். தனிப்பட்ட ரீதியாக பாலசிங்கத்திற்கும் இச் செயல்களுக்கும் சம்பந்தமில்லை என்று எவரும் கூறக்கூடும். ஆனால் அது தவறு. இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிட்லர் உட்பட சில நாஜித் தலைவர்கள் தனிப்பட்ட ரீதியாக ஒரு கொலையேனும் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனாலும்அவர்கள் குற்றச் செயல் புரிந்தவர்களாகவே கருதப்பட்டனர்.

அது போல் இலங்கை அரசும் பாலசிங்கத்துக்கு எதிராக தேசத்துரோக வழக்குத் தொடர முடியும். அவருக்கு எதிராக வழக்குத் தொடருமளவுக்கு சட்டமொன்று இந்நாட்டில் இல்லையென்றால் புலிகள் அமைப்பு இப்போது செய்துவருபவை சாதாரண செயல் என்றே கொள்ள வேண்டும்.

பாலசிங்கத்தை இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தி உடனடியாக இலங்கை அரசிடம் ஒப்படைக்கும்படி நிர்ப்பந்திக்க வேண்டும். இந்த செல்வந்த நாடுகளுக்குத் தேவையான போது இந்நாட்டுப் பிரஜைகளை அந்நாடுகளுக்கு ஒப்படைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துவந்துள்ளது. நடவடிக்கை எடுக்கும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-8[

# சனசமூக நிலையத்துக்கு ஈ.பி.டி.பி. அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்துக்கு ஈ.பி.டி.பி. கட்சியினால் தொலைக்காட்சிப் பெட்டி, ஜெனரேற்றர் மற்றும் பாலர் பாடசாலைத் தளபாடங்கள் நேற்று வழங்கப்பட்டன.

ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜன் இந்தப் பொருள்களை மேற்படி சனசமூக நிலையத்துக்கு நேரில் சென்று கையளித்தார்.

ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் பொருள்கள் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் விசேட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. (இ-5)

# பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் தற்போது பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய அட்டைகள் விநியோகிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மீளாய்வு வேலைகள் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதால் இதுவரை மீளாய்வு செய்யாத குடும்பங்கள் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பங்கீட்டு அட்டையை மீளாய்வு செய்து கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(இ-30-ரி)

# துணுக்காயில் வாந்திபேதி ஒருவர் பலி!

வவுனியா, ஜூன் 20

துணுக்காய் கல்விளான் பகுதியில் வாந்திபேதி நோய் அபாயம் அதிகரித்துள்ளதை அடுத்து அங்கு வாந்திபேதி எதிர்ப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியிலிருந்து 8 வாந்திபேதி நோயாளர்கள் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் மரணமாகிவிட்டார்.

(இ-5)

# இன்று இலங்கை வருகை

பாகிஸ்தான் செனட் சபை தலைவர் பசிம் கயாட் இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றக் குழுவொன்றுக்குத் தலைமை வகித்து வரும் இவரின் விஜயம் ஒரு தனிப்பட்ட விஜயம் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் காஷ்மீர் எல்லைப் பகுதியில் ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுள்ள சூழலில்அவர்இலங்கைக்கு விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் செனட் சபையின் தலைவர் இலங்கைச் சபாநாயகர் கே. பி. இரத்தினாயக்காவை நாளை சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்தச் சந்திப்பின் போது பாகிஸ்தான் — இந்தியா விவகாரங்கள் பற்றி அவர் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

### பொறியியல்...

(முதலாம் பக்கத் தொடர்)

லேயே உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் பலியானவர்களில் ஒருவர் வடமராட்சி புலோலியைச் சேர்ந்த எஸ். ஜெயராம் என்றும் மற்றவர் ஜெரால்ட் ஜூட் (கொழும்பு) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. (இ5-7)

### வன்னிப்...

[முதலாம் பக்கத் தொடர்]

நடத்தப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர் ஒருவரிடமிருந்து மேற்கண்ட தகவல்கள் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் இருந்து பூநகரி வரை அமைந்துள்ள— கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த — பிரதான பாதை பரந்தன் ஊடாகச் செல்வதால் பரந்தன் புலிகளுக்கு முக்கிய பிரதேசம் என்றும் —

அதனாலேயே பரந்தன் முகாமைக் கைப்பற்ற புலிகள் முயல்வதாகவும் — அந்த நிறுவனங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

பரந்தன் முகாமுக்கு சுமார் 300 மீற்றர் தொலைவில் புலிகளின்புல்டோசர்சத்தங்களும் ஆள்கள் உரையாடும் சத்தங்களும் கேட்பதாக பரந்தன் முகாம் சிப்பாய்கள் மேல் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர் என்றும்—

பரந்தன் முகாமுக்குச் சமீபமாகப் புலிகள் நெருக்கமாகக் காவல் அரண்களை அமைத்து வருகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

### சிப்பாய்களின்...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்குச் சென்றுவர நிபந்தனையுடனான அனுமதியை யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் வழங்கினார்.

1998 செப். 15 ஆம் திகதி உரும்பிராய் பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் தடுப்புக் காவலிலிருந்த இதே இடத்தைச் சேர்ந்த சரவணமுத்து உதயகுமார் என்பவர் மரணமானது தெரிந்ததே.

இந்த மரணம் தொடர்பான சந்தேக நபர்கள் ஐவரும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவர அனுமதிக்குமாறு தமது படையணியின் அதிகாரி ஊடாக யாழ். நீதிமன்றுக்கு கடந்த வாரம் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களது விண்ணப்பத்தை பரிசீலனை செய்த யாழ். நீதிமன்றம் மேற்படி 5 சந்தேக நபர்களும் தமது சொந்த இடங்களுக்கு சென்று ஜூலை 11 ஆம் திகதிக்கு முன் யாழ். திரும்பவேண்டும் என்றும் —

தமது சொந்த இடங்களில் தங்கி நிற்கும்போது அங்குள்ள பொலீஸ் நிலையங்களில் இவர்கள் கையெழுத்திட வேண்டும் என்றும் — உத்தரவு பிறப்பித்தது.

(இ-5)

### பொலீஸார்...

(முதலாம் பக்கத் தொடர்)

வடமேல் மாகாணத்திலிருந்து வாகனங்களைக் கொள்வனவுசெய்து அவற்றை அதிக விலைக்கு விடுதலைப் புலிகளுக்கு விற்று இலட்சக் கணக்கில் பணம் திரட்டுவதில் நீண்டகாலமாக ஈடுபட்டிருந்தார்கள் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக வவுனியா பொலீஸ் தலைமை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிங்கள கான்ஸ்டபிள் தவிர்ந்த மற்றைய தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இருவரும் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் இருந்து வாகனங்களைக் கொள்வனவு செய்து வவுனியாவுக்கு கொண்டுவந்தனர் எனவும் —

பின்னர் அவற்றை மன்னாருக்குக் கொண்டுசென்று புலிகளிடம் ஒப்படைப்பதில் சிங்களப் பொலீஸ் கான்ஸ்டபிள் ஈடுபட்டுவந்தார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-7-8)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 20-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org